125

உ

சிவமயம்

புதுச்சந்நிதிக் கந்தநாதன்றுணை.

# அருட்பாச் சிறப்பு.
# போலியருட்பா மறுப்பு.
# இராமலிங்கபிள்ளை படிற்றொழுக்கம்.
# ஷை அங்கதப்பாட்டு.

இவை நான்கும்,

சிவஞானப் பிரகாச சபையின் அங்கத்தவரும்,

சைவப்பிரசாரணரும் ஆகிய

தூத்துக்குடி,

இரா. ம. நயினார் செட்டியார் அவர்களால்

சென்னைப்

பிரசிடென்சி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டு,

சென்னைச் சைவசித்தாந்த சங்கத்தாரால்

வெளியிடப்பட்டன.

1904.

உ

சிவமயம்.

வேதாரணியம் ஸ்ரீலஸ்ரீ உதயமூர்த்தி தேசிக

# சற்குருநாத சுவாமிகள் ஆதீ

## ஸ்ரீலஸ்ரீ உ. தியாகராசக்குருக்கள் அவர்க

திவ்விய சந்நிதானத்தினின்றும்போந்த

## முகா நிருபம்.

அநாதி மலமுத்தபதியாகிய வேதவனப்பெருமா
திருவருளினாலும், நமது தந்தையாரது தீக்ஷாதிகார ந
யற்பலத்தாலும், அத்துவித சித்தாந்தமாகிய எம்மெய்க
வைதிகதாந்திரிகத்தைப் பரிபாலித்துவரும் சற்சீடர்களுள்
வராம் அன்புமிக்க கதிரைவேற் புலவற்குச் சர்வார்த்த
தியும், தீர்க்காயுளும் மேன்மேலும் வளராநிற்பச் சிவபூ
காலங்கடோறும் பெருமானை வேண்டுகின்றாம். நிற்க,

கருங்குழி இராமலிங்கபிள்ளை அவர்களைப்பற்றி
தந்தையாம் ஆசாரியர் அவர்கள் பிரகடனஞ்செய்த "
குணவயத்தின் முறைமறந்தறைதல்" என்னும் இலகுலே
தமக்கு அனுப்புவிப்போம். சிவபெருமானுக்கும், திருமு
களுக்கும் உரிய திருவருட் பிரகாசவள்ளல், திருவருட்
என்னும் சீரிய பெயர்களைத் தமக்கும் தம்பாடல்களுக்கு
வைத்த இராமலிங்கபிள்ளை அவர்கள் செய்கை அதிபாதக
தாகி, அநுதாபப்படத்தக்க தோன்றும். அங்கதப்பாட்டு
அதனையறிக்கும். சமயாசாரிய சுவாமிகளையும் பன்னிரு தி
முறைகளாந் திருவருட்பாக்களையும் தம்மவர் சிறப்பித்த
கும், கருங்குழியாரையும் அவர் மருட்பாக்களையும் பூர்வபக்
கள் எற்ற முன்வருவதற்கும் உண்மையறிந்து மறைக்காட
டிறை பலாபலங்களையளித்தருளும். ஸ்ரீலஸ்ரீ செந்திநாத ஐய
அவர்கட்கும் கருத்து இதுவே. ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களின்
மாணாக்கராயுள்ளாரும் சபையாரும் சிவனடியார்திருக்கூ
டத்தினரும் இதுவிடயத்திற்றஞ்சார்பினின்று ஊக்கல் அ
ரது சித்தாந்தமெய்யன்பையிலக்காநின்றது. சைவப்பிரசா
ணர் நயினார் செட்டியார் அவர்களுக்கும் நலம்வளர நல்லா
புரிகின்றேம்; சுபமஸ்து.

இங்ஙனம்
வேதாரணியம்
உ. தியாகராசக் குருக்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அநபாயச் சோழவரசர் பெருமான்றன்

அவைக்களத்தில்

சிவஞான நிட்டா மூர்த்தியாகிய

# சிவாலயமுனிவரர் தோன்றி

அருளிச்செய்த

# அருட்பாச் சிறப்பு.

## நான்கடியான் மிக்குவந்த கலித்தாழிசை.

அவஞான மவைசேர்ந்திங் கலையாமன் மெய்ம்மைச்
சிவஞான மதுகொண்டு தெள்ளியுயக் காழித்
தவஞானன் குன்றைமுனி முதலீறி னின்ற
திவமான முறைகேளாச் செவியென்ன செவியே
திருவருட்பாக் கேளாத செவியென்ன செவியே. (௧)

சீதைகதை பஞ்சவர்க டீர்ந்தகதை சங்கக்
காதைமடு பேய்கூவன் மாறனெனக் கண்டா
ரோதுகதை போயொழிய வுன்பணிரு மந்த்ர
சாதமுறை சொல்லாத தாலென்ன தாலே
தனியருட்பா வுரையாத தாலென்ன தாலே. (௨)

அஞ்சுகலை விட்டெவரு மாறுகலை யான
வஞ்சுகலை தொட்டபித மந்திர வடுக்கா
மிஞ்சுகலை நம்பிநி வகுத்தவருண் மேன்மைத்
தஞ்சமுறை கொள்ளாத நெஞ்சென்ன நெஞ்சே
தாரணியென் முறைகொள்ளா நெஞ்சென்ன நெஞ்சே. (௩)

சிவமயம்.

# முகவுரை.

சிவபெருமானுக்கு ஒப்பாகவேனும், உயர்வாக வேனும் வேறொரு தெய்வத்தைவைத்து மதிப்போரும் மதிப்பிப்போரும் சிவநிந்தகராய் அதிபாதகர் ஆவார். அன்னதற்குத் தக்கனும், அவன் யாகத்திற் சென்றிருந்த திருமால் முதலிய தேவர்களுமே கரியென்க. சிவனருள் வழி நின்று பற்பல திவ்வியாற்புதங்களானே சைவசித்தாந்தத்தின் மெய்ம்மையைக் காட்டியருளிய பரமாசாரிய சுவாமிகளாதிய நாயன்மார்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்டு, விநாயகக் கடவுளாகிய வெண்ணெய்நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையாரின்திருவருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளாலும், அநபாயச்சோழமகாராசனாலும் சிவபெருமானது திருவருளாஞ்ஞைப்படி திருமுறைகளாக வகுக்கப்பட்டு, சிவாலய தேவர், தில்லைவாழந்தணர் முதலாயினோர்களால் சிறப்பிக்கப்பட்டு விளங்காநிற்கும் பன்னிரு திருமுறைகளே திருவருட்பாவென்று இற்றைக்கு ஆயிரம் வருடத்திற்குமுன்னர்த் தொடங்கி வழங்கப்பட்டு வருகின்றன. பன்னிரு திருமுறைகளும் அருட்பா எனப்படுதல், சிவாலயமுனிவர் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய அருட்பாச் சிறப்பினாலும், சந்தானசாரிய சுவாமிகளுள், முள்ளிச்செடிக்கும்பெற்றான் சாம்பானுக்கும் முத்திகொடுத்தருளிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகண்ட புராணம், சேக்கிழார்நாயனார் புராணம் என்பவற்றில் வரூஉம் செய்யுள்களானும், ஆதீனங்களின் வழக்கானும் ஓதுவார் உரைகளானும் பெறுதும். அங்ஙனமாய அருட்பாக்களுக்கு நேராகவேனும், உயர்வாகவேனும்

திருவருள்நெறி ஒரு சிறிதுமில்லான் பாடிய பாட்டுக் களை ஒப்பாகக் கூறினோர், கூறுவிப்போர் யாவரும் சிவ சாத்திர நிந்தகராய் அதிபாதகர் ஆவார். அது,

வேதமுதற் பெருமானை யருளடியர் தமைப்போல
விறப்பத் தன்னை
யேதிலிகண் மதிக்கவெணுங் கணக்குடைய னவரருளி
னேற்று பாக்குச்
சாதமிலாத் தன்சொலையுஞ் சமமாக்கி யப்பெயரிற்
றந்தோன் சார்ந்த
நீதமிலா ரளறுபட்டுப் புழுமுதல புன்பிறப்பி
னெடுங்கா லாழ்வார்.

என்று ஞானோத்தரம் என்னு நூல் கூறியதனுனு முணரப்படும். நம்பியாண்டார் நம்பிகளும்அநபாயச் சோழமகாராசனும் பன்னிரு திருமுறைகளாகிய அருட்பாவகுத்தபின்னர், கச்சியப்பசிவாசாரியசுவாமிகள், சந்தானசாரிய சுவாமிகள் நால்வர், அதிவீரராமபாண்டியன், வரதுங்கராமபாண்டியன், சிவாக்கிரயோகிகள், நிரம்பவழகிய தேசிகர், மறைஞான சம்பந்த தேசிகர், காளிதாசன், அபிராமிப்பட்டர், வென்றிமாலைக்கவிராசர், குமரகுருபரசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள், காளமேகப் புலவர், குகநமச்சிவாய தேசிகர், பரஞ்சோதி முனிவர், மாதவப்பெருந்தகையாசிரியர் சிவஞான யோகிகள், கச்சியப்ப முனிவரர், பொய்யாமொழி, இரட்டையர், வரதராசபண்டிதர், புகழேந்தி முதலாய, இராமலிங்க பிள்ளையினின்றும் பலகோடி மடங்கு உயர்ந்த சிவஞானச் செல்வர்களும் கவிவல்லுநரும் ஆகிய ஆசிரியர்கள் தோன்றி அளவிறந்த நூல்கள் செய்திருந்தும் அவர்களாவது, அவர்களைச் சார்ந்தோராவது தங்களைத் திருவருட்பிரகாச வள்ளலார் என்றுவது, தங்கள் பாடல்களைத் திருவருட்பா என்று

வது கூற எழுந்தாரல்லர். அங்ஙன மாகவும் மருதூர்ப் பிறந்த இராமலிங்க பிள்ளை அவர்கள் தம்மைச் சிவபெருமானென நினைத்தோ, அவர்க்கே யுரிய திருநாமமாகிய திருவருட்பிரகாச வள்ளலார் என்பதனைத் தமக்குவைத்து இறுமாந்தும், தமது மருட்பாடல்களுக்குப் பன்னிரு திருமுறைகளுக்கே யுரியதான அருட்பா என்னும் பெயரோடு திரு என்னும் அடைமொழி புணர்த்தித் திருவருட்பா என்னும் பெயரை வைத்து மருட்டியும் மரித்தது, சிவநிந்தனையும் அருளடியார் நிந்தனையும், தமிழ்த் திருநெறிமுறைத் தூடணமுமாம்.

பற்பல வழுக்களும், சைவசித்தாந்த முரண்களும், இலக்கண விரோதங்களும், பொய்களும், தற்புகழ்ச்சிகளும் நிறைந்த தம் பாடல்களுக்குத் திருவருட்பா எனவும், காமாதிவஞ்சப் பாவவழிகளினும், இரசவாத ஆசையினும் புக்குழன்ற தம்மைத் திருவருட்பிரகாச வள்ளலார் எனவும் வைப்பித்து வெளியிட்டது பெருந்தவறும் சிவதூடணமுமாம் என்று புலவருள்ளிணையின்றி மரணுந்தந் துறவியாய்ச்சைவ சித்தாந்த பானுவாக விளங்கிய யாழ்ப்பாணம்ஸ்ரீ@ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் அப்படிற் றொழுக்கங்களை யெல்லாம் எடுத்து உபந்நியாச வாயிலானும் நூல்வாயிலானும் எடுத்துக் கண்டித்து ஒழித்தனர். சென்னை வித்வ சிரோமணி ஸ்ரீமந் தியாகேச முதலியார் அவர்கள் நேரிற் சென்று “ஐயா! இராமலிங்க பிள்ளை அவர்களே! தாங்கள் திருவருட்பிரகாச வள்ளலாராயிருந்தால், தங்கள் பா திருவருட்பாக்களாயின் என்றந்தையார்க்கு உற்றநோயைப் பாடித் தீர்த்தருளலாமே” என்று கேட்ப, “அவ்விடயம் எனக்குச் சம்

மதமன்று. மாணுக்கமொன்று சேர்ந்த தீக்குணத்தார் செய்யும் புரளியென்றறிக." எனக் கூறி,

> தீக்குணத்தார் யாவருமென் சீடரெனி லென்னுடைய
> தீக்குணத்தி னெல்லையெவர் தேர்கிற்பா - ரூக்கமிகு
> நல்லோர் களிக்கு நதிச்சடையோ யெற்கருளி
> லெல்லார்க்கு மையுறவா மே.

(இது சிவநேசவெண்பாவில் 70 - ம் பாட்டு.)

என்ற பாட்டைப்பாடி என்னல் ஒன்றும் முடியாது எனக்கூறினமையால் அவர் உண்மை யறிந்து திரும்பினர். பின்னர்ப் போலியருட்பா மறுப்பு என்னுமிப் புத்தகம் அவரால் வெளியிடப்பட்டது. அக்காலத் திருந்த திருவாவடுதுறையாதீன மகாசந்நிதான மாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் உணர்ந்து, "சுத்தாத்துவித சைவசித்தாந்தநெறிக்கும், திருவருண் முறைக்கும் விரோதமாக, பசுக்களாகிய செத்துப்பிறக்குந் தெய்வங்கண் மீது பாட்டுக்கள் பாடிய இராமலிங்கபிள்ளை யோர்காலுந் திருவருட்பிரகாச வள்ளலார் ஆகார். "பூவை விட்டுப்புல்லெடுப்பார்போலுன் றிருப் பாதத் - தேவை விட்டு வெம்பிறவித் தேவர்களைக் கோவையிட்டுக், கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனே - லோவுவா ராவனுனே". என இது முதலாகத் தாம்பாடிய பாக்களுக்கே சமரசம்முரணுமே. அவற்றை மறந்து வைணவருந் தம்மை மதிக்க வேண்டுமென்று ஸ்ரீராமநாமத் திருப்பதிகம், திருஎவ்வுளூர் வீரராகவப்பெருமாள் பதிகம், இலக்குமி தோத்திரம், சரசுவதி தோத்திரம் முதலியன வற்றைப் பாடிய அவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்பதும், அவர் பாட்டுக்கள் திருவருட்பா வென்பதும் சிறிது மொவ்வா தெனக் கண்டித்து அனுதாபப்பட்டனர். அதனை

அவரிடம் உபதேசம் பெற்ற சீடர்களுள் ஒருவராய திருவாவடுதுறை யாதீன மகாவித்வான் ஸ்ரீமந் சபாபதி நாவலர் அவர்கள் இயற்றிய "போலி யருட்பா வழுத்திரட்டு" என்னு நூலிற் பரக்கக் காண்க. இங்ஙனம் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானமன்றி, தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் சண்முகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருவண்ணுமலை யாதீனம் ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மறுத்துரைத்தார்கள். இன்னும் திருவாவடுதுறை யாதீனத்துச் சீடரும் இராமநாதபுர சமஸ்தான வித்துவ சிகாமணியும், மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிக ளாதீன மகாசந்நிதானத்தின் போதகாசிரியரும் ஆகிய மதுரை மகாவித்வான் ஸ்ரீமந் இராமசாமிப்பிள்ளை என வழங்கும் திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள், இராமலிங்க பிள்ளை அவர்களின் மாணவரான வேலு முதலியாருடன் பேசிக் கண்டித்த விஷயம் இந்நூலினிறுதியிற் காட்டப்பட்டுள்ளது. மகாவித்வான் முததிச் சிதம்பரம்பிள்ளை அவர்களும், கொட்டையூர் மகாவித்வான் சாமிநாத தேசிகர் அவர்களும் இதனை மறுக்கத் தொடங்கி, வைணவர்களாலே மானுடன் எனச்சொல்லப்படும் சிராமன், முதலாயினோர்க்குப் பரத்துவங் கூறியும், செத்தாரை யெழுப்புதல் எமது மேற்போர் வையாங் கம்பலத்தா லாகுமென்று வீண்புரளிகூறிக் கைம்மையரை யெல்லாங் கெடுத்துத்தானே செத்தும், எல்லாம் வல்ல சித்துக்களைச் செய்வேமென்று ஒரு சித்துஞ் செய்யாதும், ஐந்தொழிலு மியற்றும் வல்லமை பெற்றேனெனப் பகட்டுச்செய்து சித்தாந்தவிரோதம் பண்ணியும், தண்ணீரால் விளக்கெரித்தேன் என்றும், சிவனது பெரியபிள்ளை நான் என்றும், எம்மத

முஞ் சம்மதமென்று பின்னர் முரணுகச் சமரச சன் மார்க்கமே யுண்மை யென்றும், சபாபதிப்பிள்ளை என் னுந் தமது தமையனாரிடத்திற் படித்திருந்து பின்னர் அவர்க்கு மாருகவும் ஓதாதுணர்ந்தே னென்றும், இன் னன பொய்யும் முரணும் பாடியபாடல்கள் திருவருட் பா ஆகாவென்றும் உபந்நியாசித்துக் கண்டித்தார்கள்,

வேதாரணிய ஆதீனம் சற்குருநாத பாரம்பரிய சுவாமிகளும், உபய வேதாந்த சித்தாந்தப் பிரவர்த்த காசாரியரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ உதயமூர்த்தித் தேசிக சுவாமிகள் அவர்கள், இராமலிங்கபிள்ளை அவர்களைக் கண்டு, "பிறந்தவரை நீராட்டிப் பெருக வளர்த்திடு கின்றீர் பேயரேநீர் - இறந்தவரைச் சுடுகின்றீ ரெவ் வணஞ் சம்மதித்தீர்" எனவும், "பிணங்கழுவி யெடுத் துப்போய்ச் சுடுகின்றீ ரினிச்சாகும் பிணங்களே நீர்- கணங்கழுகுண் டாலுமொருபய னுண்டே யென்ன பயன்" எனவும், "குணம் புதைக்க வுயிரடக்கங் கொண்டது சுட்டாலது தான் கொலையா மென்றே - வணம்புதைக்க வேண்டுமென வாய்தடிக்கச் சொல் கின்றேன்" எனவும், பரனளிக்குந் தேகமிது சுடுவதப ராதமெனப் பகர்கின்றேனீர் - சிரனெளிக்கச் சுடுகின் றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சித்த சாமி - யுரனளிக்க வெழுகின்ற திருநாள் வந்தடுத்தனவி துணர்ந்து நல் லோர் - வரனளிக்கப் புதைத்தநிலை காணீரோ கண் கெட்டமாட்டினீரே" எனவும் நும்பாடல்களிற் பாடி யுள்ளீரே. வேதாகம விரோதமாகப் பிணங்களைப் புதைப்பித்தல் பாவமன்றோ? சுடுதல்பாவமென்று கூறினீர்களே. அதற்குப் பிரமாணமென்னை? இவ் விதம் விதியை விலக்கென்றும், விலக்கை விதியென் றுங் கூறுதல் தகுமா? பிணம் புதைக்கும் ஆங்கிலே

யரே யிப்போது சுடும்பட்டி வந்திருக்கும்போது தாங்க ளிங்ஙன் கூறுதல் நன்றன்றே. எழுப்புதற்காகப் புதைப்பிக்கச் சொன்னீராயின் ஆறு ஏழு வருடங்க ளாகச் சொல்லி ஏமாற்றிக்கொண்டு வருகின்றீர்களே. தாப்ததிலேயார் பலரைத் தடுமாற வைத்தலேற்குமா? என்று கேட்டனர். அவற்றிற்குச் சமாதானங் கூற வியலாது விழித்தார். இங்ஙன முள்ள நீவிரா திரு வருட்பிரகாச வள்ளலார்? இப்பாட்டுக்களா திரு வருட்பா? நன்று நன்று. இவையிற்றை யொரீஇ யுய்ம்மின்,, எனச் சொற்றனுப்பினர். அதும்போது "முக்குணவயத்தின் முறைமறந்தறைதல்" என்ற பத் திரிகைஷ தேசிகசுவாமிகளால் வெளியிடப்பட்டது.

இவ்வாறாகவும் தொழுவூர் வேலு முதலியார் முதலாய சில அபிமானிகள் போலி யருட்பா மறுப்பு என்னும் நாலிற்கு மறுப்பெழுதினர் போல, பலப்பல பொருந்தா வுரைகளைக் காட்டி, குதர்க்காரணியநாச மகாபரசு" என்று ஒருசுவடி வெளிப்படுத்தினர். அதற்கு மறுப்பாகக் "குதர்க்காரணிய நாச மகாபரசு கண்டனம்" என்னும் நூல் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் இராமலிங்க பிள்ளை அவர்கள் தமைய னாரும் அவர்க்கு உயத்தியாயரும் ஆகிய ஸ்ரீமந் இ. சபாபதிப்பிள்ளை அவர்கள் திருவருட்பா, திருவருட் பிரகாசவள்ளலார் என்னும் பொருந்தாச் சிவதூஷ ணப் பெயர்களை வைத்தம்போது, அருட்பாவாகிய தே வார திருவாசகங்கள் முதலியவற்றுடன் சமமாக்கல் கூடாதன்றே யென்றும், ஞானசம்பந்தர் முதலாய மூவர் முதலிகள் பாடியபாக்கள் சைவர்க்குமாத்திரம் உரிய தமிழ்வேதம். எனது பாடல்கள் எல்லாமதத் தாருக்குமுரிய சமரசவேதமென்று" தற்புகழ் கூறின

மை யகங்கார மென்றும், "இராமலிங்க பிள்ளை அங்கதப் பாட்டு" என்றுபாடிய பாட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இராமலிங்கபிள்ளை அவமானத்தா லுயிரைவிட்டனர். சிதம்பரத்திலே, யிருந்த, திருவாவடுதுறையாதீன மஹாவித்வ சிகாமணியும், ஞானாமிர்தப் பத்திராசிரியரும், வைதிகசைவ சுத்தாத்துவித தாபனரும் ஆகிய ஸ்ரீமத் சபாபதி நாவலர் அவர்கள் திராவிடப்பிரகாசிகை என்னும் சிறந்த நூலில், இராமலிங்க பிள்ளை பாடல்கள் போலியருட்பா வென்று நிறுவியதன்றி, "போலியருட்பா வழுத்திரட்டு" என்று, பாடல்களிலுள்ள தவறுகளையும் முரண்களையும் கரதலாமலகம்போற் காட்டி ஒருநூல் வெளிப்படுத்தினர். உபந்நியாசங்களும் வைத்துக் கண்டித்தார். அதைக்கண்ட சில போலிச்சைவர்கள் உண்மையறிந்து அடங்கினர். 1897ஹு ஆகிய அவ்வருடத்திலே போலியருட்பா மறுப்பாம் இந்நூல் இரண்டாவது பதிப்பிடப்பட்டுச் சிதம்பரத்தில் எவர்க்கும் உபகரிக்கப்பட்டது.

இப்போது சில போலிச்சைவர்கள் சென்னைக்கண் கருங்குழியாரையும் பாடல்களையும் திருவருட்பா எனவும், திருவருட் பிரகாசவள்ளலார் எனவும்கொண்டு சிலாகிக்கத், திருவருட்பாதிக்கை செய்தலால் இக்கண்டன விடயங்களையும் உலகோபகாரமாகப் பதிப்பித்தோம். அத்துவித சித்தாந்த மஹோத்தாரணரும், ஆசனீக்கர சமஸ்தான வித்வானும், மதுரைச் சங்கப்புலவரும், மாயாவாத தும்சகோளரியுமாகிய நம் ஆசிரியர் ஸ்ரீமத். நா. கதிரைவேற் பிள்ளை அவர்களின் உபந்நியாசங்களை யெல்லாந்திரட்டி, "இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம்" என்று ஒருநூல் வெளிவந்தது. அதனை யாவரும் பார்த்துக் கண்டு தெளிக. திருவாவடுதுறையாதீனத்துச் சீடரும், ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள் மாணாக்கரும் ஆகிய திருமயிலை சௌ. [illegible] முதலியார் அவர்கள் அனுப்பிய, இராமலிங்கபிள்ளை யஞ்ஞானப் பாக்களும், வேதாரணியம் ஸ்ரீலஸ்ரீ உ. தியாகராஜக் குருக்கள் அவர்கள் அனுப்புவித்த [illegible]யத்தின்முறை மறுத்துரைத்தல், என்னும் விடயமும் பின்னர் வெளிப்படுத்துவோம்.

இங்ஙனம்,

நா. மு. [illegible] செட்டியார்.

தூத்துக்குடி.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண மறுப்பு.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலாகப் பெரிய புராணம் இறுதியாகப் பன்னிரு திருமுறைகளும் அருட்பாவெனப் பெயர்பெற்று, சைவத்திற்கும், சிவபூசைக்கும், சிவாலய நித்திய நைமித்திகங்களுக்கும், சிவதரிசனத்துக்கும் அடியவர் பூசைக்கும் நியமமந்திரங்களாய் இருக்கும். இவ்வாறு திருக்கோவையாருண்மையிலே சொல்லப்பட்டது.

இவைகளுள்ளே, தேவாரம் அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னுஞ் சமயாசாரியர்கள் மூவராலும் அருளிச்செய்யப்பட்டது. சிவபெருமான் உமாதேவியாருக்குச் சதுர்யுகதருமங்களுங்கூறிய பின்னர், இனிக் கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து தம்மேற் பத்திசெய்வார்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னியமுனிவர் பத்தர் கூட்டத்துக்குச் சொல்லுவர் எனவுங்கூறி, அச்சரித்திரத்தை மூன்னுரைத்தருளினர் என்று பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அமிசத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரமே, அறுபத்து

மூன்று நாயன்மார்களுந் திருவவதாரஞ்செய்து முத்தி பெற்றபின்பு, உபமன்னியமகாமுனிவர், அவர்கள் சரித்திரத்தை இருடிகளுக்கு அருளிச்செய்தார். அதற்கு உபமன்னிய பத்த விலாசம் என்பதுபெயர். உபமன்னியமகாமுனிவர், சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற் கடலை உண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷைசெய்து சிவபூசை எழுந்தருளப்பண்ணிக் கொடுத்தவருமாயுள்ளவர் என்று, சைவபுராணம், கூர்மபுராணம், மகாபாரதம் முதலிய நூல்களாலே நிச்சயிக்கப்பட்டவர். உபமன்னியபத்தவிலாசமானது சிவரகசியத்திலே சொல்லப்பட்ட அறுபத்துமூவர் சரித்திரத்திற்கு ஒத்திருக்கின்றது. இன்னும் அகத்தியமகாமுனிவரும் இவ்வறுபத்து மூவர் சரித்திரத்தைத் தம்மாணுக்கர்களுக்கு அருளிச்செய்தனர். அதற்கு அகத்திய பத்தவிலாசம் என்பதுபெயர். விட்டுணு சிவசாரூப்பியம் பெறும்பொருட்டுக் காஞ்சிபுரத்திலே தவஞ்செய்தபொழுது சிவபெருமான் வெளிப்பட்டு, "கலியுகத்திலே சீகாழியிற் கௌணியர்கோத்திரத்தில் அவதரிக்கும் ஞானசம்பந்தனுடைய அருட்பதிகத்தினாலே நமது சாரூப்பியம்பெறுவாய்" என்றுதிருவாய் மலர்ந்தருளினார் என்றும், அப்படியே நிகழ்ந்ததென்றும், காஞ்சி மான்மியத்து இருபத்து நான்கா மத்தியாயத்திற்சொல்லப்பட்டது. சிவபாதவிருதயர் சமண சமயத்தையும் பௌத்தசமயத்தையும் மறுத்துச் சைவத்தை நிறுத்தும்பொருட்டு முருகக்கடவுளைத் தமக்குப் புத்திரராகத் தரும்படி தவஞ்செய்தமையால், சிவபெருமான் முருகக்கடவுளைப் புத்திரராகக் கொடுத்தருளினார் என்பதும், அவர் சரித்திரமும் சீகாழி மான்மியத்து இருபத்துமூன்றா மத்தியாயத்திற் சொல்

லப்பட்டன. இந்நாயனர் சரித்திரத்தின் ஓர்பாகம் ஆலாசியமான்மியத்துஞ் சொல்லப்பட்டது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் குழந்தைப் பருவத்தில் உமா தேவியாருடைய ஞானப்பா லுண்டு தமிழ்ப்பதிகஞ் செய்தருளினமை வடமொழிச் சௌந்தரியலகரியிலே சிறப்பித்துரைக்கப்பட்டது. அச்சௌந்தரியலகரி, ஆதியிலே திருக்கைலாசமலையில் எழுதப்பட்டிருந்து, பின்பு புட்பதந்த முனிவராலே மகாமேருமலையில் எழுதப்பட்டு, பின்பு கௌடபாதமுனிவராலே சங்கராசாரியருக்கு உபதேசிக்கப்பட்டு, பின்பு அவராலே இப்பரதகண்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளென்னுஞ் சமயாசாரியாரால் அருளிச்செய்யப்பட்டுச் சிதம்பர சபாநாயகரா லெழுதியருளப்பட்டது. அவர் சரித்திரம் ஆலாசியமான்மியம், திருப்பெருந்துறைமான்மியம் முதலியவைகளிலே சொல்லப்பட்டது.

திருவிசைப்பா, திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனர் முதலிய ஒன்பது நாயன்மார்களாலும், திருப்பல்லாண்டு, அவர்களுள் ஒருவராகிய சேந்தனராலும் அருளிச்செய்யப்பட்டன. இந்நாயன்மார்கள் சரித்திரமும், இவர்கள் செய்தருளிய அத்தியற்புதங்களும், திருவாவடுதுறைமான்மிய முதலியவைகளிலே சொல்லப்பட்டன. திருமந்திரம், பதினோராந் திருமுறை மகிமைகள் ஆங்காங்குக் காண்க.

பெரியபுராணம் சேக்கிழார்நாயனரால் அருளிச்செய்யப்பட்டது. அவர் சரித்திரமாகிய சேக்கிழார் புராணஞ் செய்தருளினவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர். அவர் தில்லை வாழந்தணர்களுள் ஒருவர்; சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க் கெளியன்

சிற்றம்பலவன் கொற்றங் - குடியார்க்கெழுதிய கைச் சீட்டுப்-படியின்மிசைப், பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து - முத்திகொடுக்க முறை" என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு, பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்திகொடுத் தருளினவர்; அப்பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அதனுண்மையை வெளிப் படுத்தி அவர்கள் சந்தேகத்தை யொழித்தற் பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத் தருளினவர்.

சருவஞ்ஞராகிய சிவபெருமானுடைய திருவாக்கினாலும், அவரருள் வழிப்பட்ட இருடிகளுடைய திருவாக்குகளினாலும், திருக்கைலாசபரம்பரைச் சந்தானசாரியர்களுடைய திருவாக்குக்களினாலும், மேற்கூறிய நாயன்மார்கள் பசுகரணநீங்கிச் சிவகரணம் பெற்றவர் என்பது தெளிவுற நாட்டப்படும். ஆதலினால், இந் நாயன்மார்கள் அருளிச்செய்த தேவாரமுதலிய பன்னிரண்டும் பதிவாக்கென்றே தெள்ளிதிற்றுணியப்படும்; பசுவாக்கென்று நினைக்கினும், அதுபிறவித் துன்பத்துக்கும் நரகத்துன்பத்துக்கும் வித்தாகும். இவர்கள் திருவாக்கு அருட்பா வென்பதும், வேதத்தினும் பார்க்க இவைகளிற்றானே சிவபிரானுக்கு அதிகபிரீதியுள்ளது என்பதும், சிவபிரான் உமாதேவியாருக்குக்கூறினாரெனச் சிவரகசியத்திற்கூறிய கிரந்தங்களினாலும், திருக்கோவையாருண்மையாலும், சிவாலய தேவர் அநபாயச் சோழனவைக்களந் தோன்றி யருளிய சிறப்புப்பாக்களாலும், திருமுறைகண்ட புராணத்தாலும், தேவாரத் திருக்கடைக் காப்புகளாலும், பதினோராந் திருமுறைக்கணுள்ள செய்யுள்களானும், பெரிய புராணத் திருவிருத்தங்களாலும் பிறவற்றானு முணரப்

படும். இந்நாயன்மார்களுள், சமயாசாரியர் நால்வரை யும் சந்தானாசாரியர் எண்மரையும் ஞானத்திற் கிரி யையாகிய ஞான பூசையிலே சிவலிங்கப்பெருமா னோடு பூசிக்கும்படி விதிக்கப்பட் டிருக்கின்றது. அது தத்துவப்பிரகாசமுதலிய உண்மைநூல்களாலே துணி யப்படும். அப்படியே ஞானாதீனத்தார் யாவரும் பண் டைக்காலமுதற் பூசித்துக்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வருட்பாப் பன்னிரண்டனையும் நாடோறும் நியமமாகப் பூசித்தலும், இவைகளைச் சிவாலய நித்திய நைமித்திகங்களிலும், சந்தியாவந்தனம் சிவபூசை மா கேசுர பூசைகளிலும் ஓதுதலும், அங்ஙனம் ஓதுபவர் களை வழிபடுதலும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதத்தாராலும் பண்டைக் காலந் தொடங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

இவையெல்லாம் இங்ஙனமாக; தற்காலத்திலே கருங்குழி இராமலிங்கபிள்ளை யென்பவர் தாம் சிவா நுபூதி பெற்றவரென்று உலகத்தார் நம்பித் தம்மை வழிபடும்பொருட்டுச் சிலபாடல்களைப்பாடி, அவை களுக்குத் திருவருட்பாவென்றும், தமக்குத் திருவருட் பிரகாசவள்ளலாரென்றும், தாமே பெயரிட்டுக்கொண் டும், தம்முடைய மாணாக்கருள் ஒருவராலே தமக்குத் திருவருட்பாவரலாறென ஒரு புராணஞ்செய்வித்து இறுதியிற் சேர்த்துக்கொண்டும், அச்சிற்பதிப்பித்து விக்கிரயஞ்செய்விக்கின்றனர். அது கண்ட அறிவிலி கள் சிலர் அவ்விராமலிங்கபிள்ளையைச் சமயாசாரியர் களோடு சமத்துவமுடையவரென்றும், அவர்பாடலைத் தேவாரதிருவாசகங்களோடு சமத்துவமுடையதென் றும், பாராட்டிக்கொண்டும், பூசித்துக்கொண்டும், அநுட்டானம் பூசை சிவதரிசனமுதலியன செய்யுங்

காலங்களில் ஓதிக்கொண்டும் வருகின்றார்கள். சில்போது சென்னபட்டினத்துள்ள சிலவாலயங்கள் சிலவற்றில் மாத்திரம் உற்சவத்திலே தேவாரமுதலிய அருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்கபிள்ளை பாட்டையே ஓதுவிக்கின்றார்கள்.

இவ்வேழைகள் இப்படி மயங்கிக் கெடுதற்குக் காரணம், இராமலிங்கபிள்ளை திருவருள் பெற்றவரென்று அவர் பாடலிலும் அவர் மாணுக்கர் பாடலிலுஞ் சொல்லப் பட்டிருத்தலும், இராமலிங்கபிள்ளைக்கு இரசவாதந் தெரியுமென்றும், அவர் பல அற்புதங்களைச் செய்கிறாரென்றும், அவரும் அவர் மாணுக்கர்களும் சொல்லிக்கொண்டு திரிதலுமேயன்றி வேறில்லை. ஆதலின், அவ்வேழைகண்மேல் வைத்த இரக்க மிகுதியினாலே, அப்பாடல்களுட் சிலவற்றையும் அவர் வாய்மொழிகளையும் இங்கே எடுத்துக் காட்டி அவர் திருவருள் சிறிதும் பெறாதவரென்றும், உலகத்தாரை வஞ்சித்துப் பொய்ப்புகழ்பெறப் புகுந்தவரென்றும், தெளிவுபெறக் காட்டுவாம்.

இராமலிங்கபிள்ளை தாம் ஓதாமலே திருவருளால் எல்லாவற்றையும் அறிந்தவர் என்று தம்பாட்டினாலே தாமே சொல்கின்றார். அப்பாட்டு இது:—

"நாதாபொன்னம்பலத்தேயறிவானந்தநாடகஞ்செய்
பாதாதுரும்பினும்பற்றாதவென்னைப்பணிகொண்டெல்லாம்
ஓதாதுணரவுணர்த்தியுள்ளேநின்றுளவுசொன்ன
நீதாநினைமறந்தென்னினைக்கேனிந்தநீணிலத்தே."

அவர் மாணாக்கர் வேலுமுதலியார் அவரருளால் தாமும் எல்லாம் ஓதாதுணர்ந்தவரென்கின்றார். ஐயகோ! இவர் படிற்றொழுக்க மிருந்தவாறென்னே? அப்பாட்டு இது:—

"மீதானத்துயர்பள்ளிமேவவெமைவைக்குமெங்கண்
மேதாவைப்பள்ளிவிழைந்தருளிற்றென்றுரைப்பதெவன்
ஓதாமேயெமையெல்லாமுணர்த்துமுருவெளியையச்சோ
ஓதாமேயுணர்ந்ததென்பாருணர்கிலாரொருவியப்போ."

திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர், வித்தியாரம்பஞ்செய்து கொள்ளாமலே மூன்று பிராயத்திலே ஞானப்பாலுண்டு அக்கணத்தே வேதசிவாகமாதிகளையெல்லாம் ஒருங்குணர்ந்து தேவாரம் பாடியருளினமையால், ஓதாதுணர்ந்தவரென்று சிவ பிரானுலும் இருடிகளாலும் மெய்ஞ்ஞானிகளாலும் சிறப்பித்துரைக்கப்பட்டார். இராமலிங்க பிள்ளையும் அவர் மாணுக்கரும் ஓதாதுணர்ந்தது சத்தியமே யாயின், அவர்கள் யாரொருவரிடத்தும் சுவடியேந்திப் படிக்கவில்லையா? படித்ததைப் பலர் காணவில்லையா? முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கலாமா? ஓதாதெல்லாமுணர்ந்தேம் என்றதில் எல்லாமென்றது எல்லாப்பாஷைகளையுமா? சமஸ்கிருதம் தமிழ் என்னுமிரண்டு பாஷைகளைமாத்திரமா? தமிழைமாத்திரமா? தமிழிலுள்ள எல்லாநூல்களையுமா? அவைகளுள் இலக்கணம் இலக்கியம் ஞானசாத்திரமென்னும் இம்முத்திறத்துநூல்களெல்லாவற்றையுமா? அப்படி யாயின், தாம் பதிப்பித்த புத்தகங்களிலுள்ள பிழைகளுக்கு யாது சமாதானஞ் செல்லுவர்?

தொண்டைமண்டலம் என்றிருக்கவேண்டுவதைத்தொண்டமண்டலம் எனத் தம்மாணுக்கர் ஒருவர் பொருட்டுச் சாதிக்கப்புகுந்து புதுவிதிகள் கற்பித்து அறிவிலாதாரை வஞ்சித்தாரே? அவைகள் பழவிதிகளென்பராயின், இன்ன நூலில் இன்ன அதிகாரத்தில் இன்ன இயலில் இத்தனையாஞ் சூத்திரமெனக் காட்

டல்வேண்டுமே! தொண்டைமண்டலமேசரியென்பது அகத்திய முனிவர் வரத்தாற் றோன்றி வடநூற்கடலுந் தென்றமிழ்க்கடலு முழுதொருங்குணர்ந்து சிவாநுபூதிப்பெருஞ் செல்வமுற்று விளங்கிய திராவிடபாஷ்ய முநிவராகிய திருக்கைலாசபரம்பரைத்திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த காஞ்சிப்புராணத்துத் திருநாட்டுச்சிறப்பில் "எந்நாட்டுப் பெருவளமு மெவ்வெவர்கோட் பாடுகளு மியம்பவல்ல, பொன்னாட்டுப் பொன்செருக்கும் பன்னாக்குப் பணிச்செருக்கும் போக்குமிந்த, நன்னாட்டைப் புலவரெலாந் தொண்டைநாடெனவுரைப்பர் ஞாலமங்கை, தன்னாட்போ தனையமுகக் கனிவாயாங் காரணத்தின் சார்பாற்போலும்" என்னுஞ் செய்யுளாற்றுணிக. அன்றியும் பத்துப்பாட்டுட் சிறுபாணாற்றுப்படையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொண்டைமான் இளந்திரையன் என்றதற்கு எழுதிய வரலாற்றானு முண்மை கடைப்பிடிக்க. இது தெரியாதவரா ஓதாதுணர்ந்தார்.

பிரளயாகலராவார் இருமலமுடையராகிய உருத்திரர்களென்பதும், சகலராவார் மும்மல முடையராகிய பிரமவிட்டுணு முதற் கிருமியீறாக உள்ள உயிர்களென்பதும், சாதாரணமாகிய தத்துவக்கட்டளைகள் வாசித்தவருக்குந்தெரியுமே. அஃதறியாது "பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்" என்று ஒழிவிலொடுக்கவுரைப் புத்தக முதலிலே பதிப்பித்த இராமலிங்கபிள்ளையா ஓதாதுணர்ந்தவர்! ஶ்ரீ ஸ்திரீ என்னுஞ் சொற்களுக்கும் ௬௦௰, ௲௦௰. என்னுஞ் சொற்களுக்கும் வேற்றுமை யறியாது, ஶ்ரீகண்ட பரமசிவனென்பதற்குப் பெண்ணைப் பாகத்துடைய பரமசிவனெனப் பொருள்கூறித் தம

தறியாமையை உலகறியப் புலப்படுத்திய இராமலிங்க பிள்ளையா ஓதாதுணர்ந்தவர்? அவர் தாம் பதிப்பித்த ஒழிவிலொடுக்க வுரையிலே சுழுமுனையைச் சுழிமுனை யென்றும், சொப்பனத்தைச் சொற்பன மென்றும், ஞாதிருவை ஞாதுருவென்றும், கேட்கவென்பதைக் கேழ்க்கவென்றும், சரியையைச் சரிதையென்றும், பிராரத்தத்தைப் பிராரத்துவமென்றும், தோன்றிய விருதுகாலமென்பதைத் தோன்றப்பட்ட விருதுகால மென்றும், நூல்கேட்டலே நூற்கேட்டலென்றும், அழியுமித்தேகாதி யென்பதை அழியப்படவித்தேகாதியென்றும், மண்ணினின்றுங் கடகலசாதிகாரியங்களென்பதில் மண்ணினின்றென்பதை மண்ணேயென்றும், நூல்களறிவிக்கமாட்டாவென்பதை நூல்களறிவிக்க மாட்டாதென்றும், மகேசுரனை மயேசுரனென்றும், இச்சாயத்தினத்தை இச்சாயெத்தினமென்றும், அத்தமயனத்தை அத்தமானமென்றும், அவைகளறியாவென்பதை அவைகளறியாதென்றும், இச்சாஞானமுதலிய வருவிக்கப்பட்டன வென்பதிற் பட்டன வென்பதைப் பட்டதென்றும், போயவிட்டான்மா வென்பதைப் போயவிடத்து வான்மாவென்றும், பெத்த தசையைப் பெத்ததிசையென்றும், வார்ணத்தை வந்ந மென்றும், கதிரவனுக்கு மசுத்தமுமின்றாயதென்பதைக் கதிரவனுக்குஞ் சுத்தமுமின்றாயதென்றும், சகமார்க்கத்தைச் சகசமார்க்கமென்றும், நேதிகளைதலை நியதிகளைதலென்றும், வெதுப்புதலை வெதிப்புதலென்றும், உற்பிச்சத்தை உற்பீசமென்றும், தொடையைத் துடையென்றும், மித்தியாரூபத்தை மித்தையாரூப மென்றும், ஆகவென்னும் வினையெச்சங்களை ஆயென்றும் பதிப்பித்திருக்கின்றாரே. இன்னும் அப்புத்தகப்

பிழைகளை யெடுத்துச் சொல்லப்புகின், மணற்சோற்றிற் கல்லாராயப் புகுதல்போலும். அப்புத்தகத்திற் பலவிடங்களிற் பெயரெச்சங்களை முற்றெனக்கொண்டு முற்றுக்குறிகொடுத்து வரிமுடிவுசெய்து, அவை கொள்ளும்பெயர்களை வேற்றுவரிக்கு முதலாகக்கொண்டு தொடங்கியிருக்கின்றாரே. இவ்வியல்புடையவரா ஓதாதுணர்ந்தவர்! குமரகுருபரசுவாமிகள் ஐந்துபிராயம் வரையும் ஊமையாயிருந்து திருச்செந்தூர் முருகக்கடவுளது திருவருளினால் ஓதாதுணர்ந்தவுடனே பாடியருளிய திருச்செந்தூர்க் கலிவெண்பா இலக்கணப் பிழைகளில்லாததாயும், சைவசித்தாந்த சாத்திரத் துண்மைப் பொருளை யுடையதாயும், இருக்கின்றதே. அவர் பின் பாடியருளிய பிரபந்தங்களும் அவ்வாறே இருக்கின்றன. அங்ஙனமாகவும், அவர்தாம் ஓதாதுணர்ந்தவரென்று தம்மை எவ்விடத்தேனும் புகழ்ந்துகொள்ள வில்லையே. இராமலிங்க பிள்ளையோ சிறுவர்களுக்குள்ள கல்வியறிவு தானும் இல்லாதிருந்துகொண்டு தம்மைத்தாமே ஓதாதுணர்ந்தவரென்று புகழ்ந்து கொள்ளுதல் சாலவும் வியக்கற்பாலதாம். தமது தமயனாராகிய சபாபதிப் பிள்ளையிடம் படித்து, அவரிருக்கவும் ஓதாதுணர்ந்தேனென்று பொய்கூறினமையாலன்றோ குருவென்னுஞ் சபாபதிப்பிள்ளை இவரது பொய்களையெல்லாங் காட்டி அங்கதப்பாட்டொன்று வெளிப்படுத்தினார்.

இராமலிங்கபிள்ளை தாம் தண்ணீரால் விளக்கெரித்தாரென்று தாமே தமது பாட்டினால் வெளிப்படுத்துகின்றார். அப்பாட்டு இது:—

"மெய்விளக்கேவிளக்கல்லால்வேறுவிளக்கில்லையென்றார்மேலோர்நானும், பொய்விளக்கேவிளக்கெனவுட்பொங்கிவ

ழிகின்றேனோர்புதுமையன்றே, செய்விளக்கும்புகழுடைய சென்னநகர்நண்பர்களேசெப்பக்கேளீர், நெய்விளக்கேபோன் றொருதண்ணீர்விளக்குமெரிந்ததுசந்நிதியின்முன்னே."

இதற்குச் சிதம்பரநாததம்பிரானும், வேலுமுத லியாரும், தங்கள் பாட்டுக்களிலே சாக்ஷியுஞ்சொல் கின்றார்கள். எரிப்பித்துக் காட்டுங்களென்றால் மௌ னஞ்சாதிக்கின்றார். சாக்ஷி வருமாறு :—
அவை இவை :—

"தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கட
முண்ணீர் சிவம்விளங்க வோங்குவிக்கும்—கண்மணியா
நங்க ளிராமலிங்க னல்லவருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு."

"பண்ணீர்மைச்சுவைமுதிர்ந்ததிருப்பனுவலருட்பயனைத்
தண்ணீரொன்றொருவெண்பாச்சம்பந்தப்பிரான்வழியிற்
றெண்ணீர்த்தென்கூடல்வருஞ்சிதம்பரமாமுனிதெரித்தா
லுண்ணீர்மையொன்றுமிலேனுமைப்பதுமோர்புகழாமே."

"நல்லருளினியல்பெளியோம்பெறக்காட்டநன்னீரால்
சொல்லலிருளறவிளங்கெரிவித்துந்தீச்சனன
வல்லபிணியறுவிக்கும்வகைகாட்டும்படியுடலி [ம்."
னல்லல்செயும்பிணியனைத்துமருண்மொழியானேயறுத்து

இவ்விருவர்களும் இங்ஙனஞ் சாக்ஷியுஞ்சொல் லப் புகுந்தது, இராமலிங்கபிள்ளை தண்ணீரால் விளக் கெரித்ததைநேரேகண்டா? அவர்சொல்லைக் கேட்டா? இவர்கள் உலகறிந்த ஆப்தர்களா! சிதம்பரதம்பிரான் மேற்கூறிய வெண்பாப்பாடினவர் தாமேயென்று அறி ஞர்கள் சபையிற்சொல்ல மாட்டுவாரா? இவர் எவ் வாதீனத்துத் தம்பிரானெனப் படுகின்றாரோ அவ்வா தீனத்துப் பண்டார சந்நிதிகள் இவர் சாக்ஷியத்தை அங்கீகரித்தனரா? இல்லையே. உலகத்தார்களே! ஆரா யுங்கள் ஆராயுங்கள்.

இராமலிங்கபிள்ளை, தாம் தண்ணீரால் விளக்கெரித்தது சத்தியமேயாயின், நமிநந்திபடிகள்போலவே சுவசமயிகளும் பரசமயிகளுமாகிய வெகுசனங்களெதிரே தண்ணீரால் விளக்கெரித்துப் பரசமயிகளுக்குச் சைவத்துண்மையை வெளிப்படுத்தலாமே! அது தமக்கு ஆவசியகமன்றாயின், அவர்தாந் தண்ணீரால் விளக்கெரித்தமையைச் சென்னைநகர் நண்பர்களுக்கு மேலைச் செய்யுளால் வெளிப்படுத்தவேண்டுவதில்லையே! அவர் சும்மாவிருப்பினும், இச்சாக்ஷிகளிருவரும் அவரைவலிந்து பிரார்த்தித்துப் பலரெதிரே தண்ணீரால் விளக்கெரிக்கச்செய்து தங்கள் சாக்ஷியம் மெய்ச்சாக்ஷியமெனத் தர்பித்தல்வேண்டுமே. இப்படிச்செய்யாவிடத்து ஆசாரியரும் மாணாக்கர்களும் உலகத்தாரை வஞ்சிக்கப்புகுந்தவர்களென்பதற்கு எள்ளளவுஞ் சந்தேகமில்லையே! இப்போதாவது எங்கட்குத் தண்ணீரால் விளக்கெரித்துக் காட்டுவராயின் அருட்பாவென நம்புவேம். பஞ்சகிருத்தியஞ்செய்யும் ஆற்றலைத் தமக்குச் சிவன்கொடுத்தாரென்று கருங்குழியார் கூறுவது சித்தாந்தமுரணும். அதுவும் பொய்யே.

இராமலிங்கபிள்ளை சாக்கிரத்திலே நடேசர் தம்மிடத்திற்கு வந்து தம்மைத் தடவித் தம்மோடு பேசித் தமக்கு ஒன்றுதந்தாரென்று தம்முடைய பாட்டுகள் பலவற்றினால் வெளிப்படுத்துகின்றார். அப்பாட்டுக்களுட்சில வருமாறு:—

“ இருளறவோங்கும் பொதுவிலேநடனஞ்செ
யெங்குருநாதனெம்பெருமான்
அருளெனும்வடிவங் காட்டியொண்முகத்தே
யழகுறும்புன்ன கைகாட்டித்

தெருளுறவருமைத் திருக்கையாற்றடவித்
திருமணிவாய்மலர்ந்தருகிற்
பொருளுறவிருந்தோர் வாக்களித்தென்னுட்
புகுந்தனன்புதுமையீதன்றோ ”

“ அன்றொருநாளிரவிடைவந் தணிக்கதவந்திறப்பித்
தருண்மலர்ச்சேவடிவாயிற் படிப்புறத்துமகத்து
மன்றவைத்துக்கொண்டென்னை வரவழைத்துமகனே
வருந்தாதேயிங்கிதனை வாங்கிக்கொளென்ன
வொன்றுசிறியேன்மறுப்ப மறித்தும்வலிந்தெனது [ய்
வொருகைதனிற்கொடுத்திங்கே யுறைதியெனமறைந்தா
இன்றதுதானனுபவத்துக் கிசைந்ததுநாயடியேன்
என்னதவம்புரிந்தேனோ வினித்துயரொன்றிலனே ”

“ நெடுமாலும்பன்றியென நெடுங்காலம்விரைந்து
நேடியுங்கண்டறியாத நீடியபூம்பதங்க
டொடுமாலையெனவரு பூமகண்முடியிற்சூட்டித்
தொல்வினையேனிருக்குமிடந் தனைத்தேடிதொடர்ந்து
கடுமாலைநடுவிரவிற் கதவுதிறப்பித்துக்
கடையேனையழைத்தெனது கையிலொன்றுகொடுத்துக்
கொடுமாலைவிடுத்துமகி ழென்த்திருவாய்மலர்ந்தாய்
குணக்குன்றேயிந்நாணின் கொடையையறிந்தனனே ”

“ உம்பருக்குங்கிடைப்பதரிதா மணிமன்றிற்பூத
வுழிவடிவங்கடந்தாடுந் திருவடிகளிடத்தே
செம்பருக்கைக்கல்லுறுத்தத் தெருவினடந்திரவிற்
றெருக்கதவந்திறப்பித்துச் சிறியேனையழைத்து
வம்பருக்குப்பெறலரிதா மொருபொருளென்கரத்தே
மகிழ்ந்தளித்துத்துயர்தீர்ந்து வாழ்கவெனவுரைத்தாய்
இம்பருக்கோவம்பருக்கு மிதுவியப்பாமெங்க
ளிறைவநினதருட்பெருமை யிசைப்பதெவனணிந்தே ”

“ என்வடிவந்தழைப்பவொரு பொன்வடிவந்தரித்தே
யென்முனடைந்தெனைநோக்கி யிளநகைசெய்தருளித்
தன்வடிவத்திருநீற்றுத் தனிப்பையவிழ்த்தெனக்குத்
தகுசுடர்ப்பூவடிக்கவுநான் றான்வாங்கிக்களித்து

மின்வடிவப்பெருந்தகையே திருநீறுந்தருதல்
வேண்டுமெனமுன்னரது விரும்பியளித்தனநா
முன்வடிவிற்காண்டியென வுரைத்தருளிநின்று
யொளிநடஞ்செயம்பலத்தே வெளிநடஞ்செயரசே."

இப்படிவரும் பாடல்கள் ஏறக்குறைய இருநூறுண்டு.

இராமலிங்கபிள்ளைக்குத் திருவருட்பிரகாசவள்ளலாரெனக் காரணப்பெயருண்டாயிற்றென்று நூன்முகப்பத்திரத்திற் கூறப்பட்டதன்றியும், வேலுமுதலியார்பாட்டிலுங் கூறப்பட்டிருக்கின்றது. அது இது:—

" தனித்துரைத்த விராமலிங்கத்தனி மறையாதரித்துய்ந்தா
ரினித்தவருட்பிரகாச வள்ளலென வினிதேத்தி
யனித்தமற்றுஞ் சிலவறவரந்தோவென் போன்மறந்து [ர்."
மனித்தனெனக்கொண்டொழிந்தார்மலவாழ்விற்சிலமறவ

இராமலிங்கபிள்ளைபாடல் திருவருளாலே பாடப்பட்டமையாலும் திருவருளை விளைவித்தாலும் திருவருட்பாவெனப் பெயர் பெற்றதென்று வேலுமுதலியார்பாட்டுக்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு:—

" ஆயவருளிறையெங்க ளருட்பிரகாசப்பெருமான்
றூயவருளாற்பொழிந்த சொல்லமிழ்தாந் தமிழ்ப்பெருக்கு
நேயவருட்பற்றுகி நிறைமனத்துப்பெரியர்க்கு
மாயமயக்குழலென் போன்மறவர்க்குமுள்ளுருக்கி"

" அளவாதபேரன்பு சொரிந்தருளைவிளைவித்துத்
தளவாருநகைக்கயற்கட் டையலிடங்கொண்டபிரான்
வளமாருங்கழன்மலரோடிரண் டறத்துவாழ்விக்கு
முளவாலேயருட்பாவென் றொருநாமம்பூண்டதுவே."

இராமலிங்கபிள்ளை, தாம் நடேசரைச் சாக்கிரத்தே தரிசித்து அவராலே கட்டித்தழுவப்பட்டு அவரோடு கலந்து பேசி அவருடைய திருவருளைப்பெற்றதும், தம்முடைய பாடல் திருவருளை விளைவிக்கும்

பொருட்டுத் திருவருளினாலே பாடப்பட்டதுஞ் சத்தியமேயாயின், சமயாசாரியர்கள்போல உலகத்தார் காணச் செத்தவர்களை உயிர்ப்பித்தல் முதலிய அற்புதங்களைச் செய்து அவ்வற்புதங்கள் வாயிலாகப் புறச்சமயங்களைக் களைந்து சைவசமயத்தை நிறுத்தலாமே! "மறைகணிந்தனை சைவநிந்தனை பொறுமனமும்" "தீமையாம் பரசமயங்களொழித்திடுதிறனும்" மெய்யன்பரிலக்கணங்களென்று திருநந்திதேவர் கூறியிருக்கின்றாரே! பசுகரணநீங்கிச் சிவகரணம் பெற்றவர்க்கு அரியது யாது? "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங் - காலனையன் றேவிக் கராங்கொண்ட - பாலன் - மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங் - கரணம்போ லல்லாமை காண்" என்னுந் திருக்களிற்றுப்படித் திருவெண்பாவைக் கேட்டிலர்போலும்.

நான் திருவருளைப் பெற்றது என்னுடைய ஆன்மசுகமொன்றன்பொருட்டேயன்றிப் பிறருடைய ஆன்மசுகத்தின் பொருட்டன்று. ஆதலால் அற்புதஞ்செய்யும்பொருட்டு என்னை ஒருவர் கேட்கவேண்டுவதுமில்லை; நான்செய்யவேண்டுவதுமில்லை என்று சொல்வாராயின், தாம் திருவருளைப் பெற்றவரொன்று பாடி உலகறிய அச்சிட்டு விக்கிரயஞ்செய்யவேண்டுவதுமில்லை. திருவருளின்து விளக்கத்தை வரையாது கொடுப்பவரெனப் பொருள்படுகின்ற திருவருட்பிரகாச வள்ளல் என்னும் பெயரைத் தாம் வகிக்கவேண்டுவதுமில்லை. சென்னைநண்பர்களாகிய நம்மையெல்லாம் முன்னிலைப்படுத்தித் தாம் தண்ணீரால் விளக்கெரித்ததை நமக்கெடுத்துரைக்க வேண்டுவதுமில்லை. தாம் வேதசிவாகமங்கள் விளங்கவும், சைவசமயந்தழைக்கவும், வடமொழியும் தமிழ்மொழியும் நிலைபெறவும்,

அன்பர்களுக்குச் சித்தி முத்தியிரண்டும் பாலிக்கவும் கடவுளில்லையென்பவர்களாகிய நாத்திகர்களும் உய்ய வும், மூன்றுகண்ணும், எட்டுப்புயமும், ஐந்து முக முமம், காளகண்டமும், கங்கைச் சடையும் மறைத்துத் தாம் எழுந்தருளிவந்தவொன்று தமது மாணுக்கராகிய வேலுமுதலியாராலே தமக்குப் புராணஞ் செய்வித் துக்கொண்டும், ஆன்மாக்களுடைய பாசபந்தங்களை அறுப்பவை தம்முடைய இருதோளும், அருள் பொழி யும் இருகண்ணும், இராமலிங்க அற்புதத்திருநாமமும், ஆறு திருமுறைகளுமேயன்றிச் சிவபெருமானுடைய எட்டுப்புயமும், மூன்றுகண்ணும், பஞ்சாக்ஷரமும், நான்கு வேதமுமல்லவென்று தமதுபருமகனுகிய சுந் தரம்பிள்ளையைக்கொண்டு பாடுவித்துக்கொண்டும், தம் முடைய பாடலோடு சேர்த்து அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்த வேண்டுவதுமில்லை. அப்பாடல்கள் இவை :—

"மறைவிளங்க வாகமவாய் மைகள் விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையுந் தென்றமிழுந் துணிபொருளி
னிறைவிளங்க நீடுயிர்க ணெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்கப்பொய்புகுதாதேழையோம்புலம்விளங்க.
அறங்காட்டுந் துறைகாட்டி யறுசமயத் தவரவர்க்குந்
திறங்காட்டிச் சிவங்காட்டிச் சித்தி முத்தித் திருக்காட்டிப்
புறங்காட்டிற் பொய்யுடலை வையாமெய்ப் புலங்காட்டி
மறங்காட்டென் மனக்காட்டை வளராமே மதிகாட்ட.
தவநெறியுந் தவப்பயனுஞ் சார்புஞ்சார் புணர்பொருளுஞ்
சிவனருளு மருட்பயனுந் தேர்ந்தனர் தேர்ந்ததுமுணரா
தவநெறியிற் புக்குழன்றங் கசதியா டுறுமறிவில்
பவநெறிநாத் திகருமுயப் பரிந்தருளி னியல்காட்டி.
சன்மார்க்கத் தவர்யாருந் தனிவிரும்பு நிலைவிரும்பும்
பன்மார்க்கத் தவர்யாரும் பற்றுமொரு பற்றுமி

யென்மார்க்கத் தவர்களுநா டரியபழம் பொருளெளியேன்
றுன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி.
ஊரொடுபே ருருவொன்று மில்லாத வொப்பிலுணர்
வோருருவீ ருருமுக்க ணுலிருதோ ளைந்துமுகங்
காருறுகண் டமுமாறு கவர்சடையு மறைத்தருளி
யேருறவந் தெழுந்ததுவோ வன்றியிமை யவர்க்கன்று.
உருநாம மிராமலிங்க மெனக்கொண்டா ரோங்கருளாற்
குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தா ருயநினைந்தார்
பெருநாம மந்திரத்தைப் பெற்றியறி யாரெல்லாந்
திருநாம மிதுபிள்ளைத் திருநாம மென்பாரே.''

"தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவஞ ரெங்கள் [க்க
சனிப்பிறப்பை யொறுத்துவினைத் தனித்தொடக்கை யறு
வேய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்
தெண்டோளோ விருதோளோ முக்கண்ணோ விருமை
யாய்மலர்ந்த வருட்கண்ணோ நாமமெழுத் தைந்தோ
வன்றியரு ளிராமலிங்க வற்புதப்பொற் பெயரோ
வாய்மலர்ந்த திரிரண்டு மறையோமூ விரண்டு
மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமா தவரே.''

திருவருட்பிரகாசவள்ளலெனப் பெயர் வகித்து நாம்பெற்ற திருவருளை உலகத்தாருக்குப் பிரஸிப்போம் என்று திருவருட்பாவை வெளிப்படுத்தினவர் பரசமயங்களைக் களைந்து, சைவத்தை நிறுத்தாது மறுத்தல், அன்னதாதாவெனப் பெயர்வகித்து அன்னக் கொடிகட்டி அன்னதானஞ்செய்யப் புகுந்த ஒருவர், பசித்தவர்களுக்கு அன்னமில்லை என மறுத்தல்போலாமே. இராமலிங்கபிள்ளை, தம்மை ஞானசாரியரென அடைந்த சிதம்பரத்துத்தீக்ஷிதரொருவர் சன்னிபாதத்தால் வருந்தி "அடியேனைப் பிழைப்பித்தல் வேண்டும் பிழைப்பித்தல் வேண்டும்'' என்று கெஞ்சக்கெஞ்சப் "பிழைப்பிப்போம் பிழைப்பிப்போம்'' என்று சொல்

விச்சொல்லி இறுதியிற்பிழைப்பியாத் திறக்குப்படி கைவிட்டுவிட்டாரே! அவர் இறந்தபின்னாயினும், தமது திருவருட்பாவினால் அவரெலும்பை ஆணுக்கிற் தமது பெருமையை உலகறிய வெளிப்படுத்தினாரில்லையே! வருணத்தாலும், ஆச்சிரமத்தாலுங் கல்விமுதலிய பிறவற்றாலும் சங்கராசாரிய சுவாமிகளைத்தானும் அஞ்சலிசெய்யவும் கூசி நாமும் சபாநாயகருஞ் சமமென்றுகூறி இறுமாக்குந் தீக்ஷிதர் மரபிற் பிறந்துந் தங்காலில் விழுந்து தம்மையே ஞானாசாரியரெனக்கொண்டு வழிபட்ட அதிதீவிரதர பரிபக்குவராகிய இந்தத் தீக்ஷிதருடைய எலும்பை ஆணுக்காத இராமலிங்கபிள்ளை இனி வேறியாவருடைய எலும்பை ஆணுக்கப்போகின்றார்! நமது பிள்ளை, சிவானுபவம் பெறாதிருந்தும் பெற்றவர்போல நடிப்பவர் பெறும்பேற்றைத் "தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச்சியப் பயனைச் - சொன்னபிழை கெட்டேன் றொலைப்பரோ - முன்னே - நடவா வழியொருவன் சொல்ல நடந்து - தடுமாறி நொந்தறியா தார்" என்னும் ஒழிவிலொடுக்கச்செய்யுளையும் "தன்னெஞ்சந் தனக்குச் சான்றது வாகத் தத்துவ நன்குணராதே, வன்னெஞ்சனாகிக் கூடமே புரிவோன் வஞ்சகக் கூற்றினுங் கொடியோன், பன்னுங்காலவன்றன் றரிசனம் பரிசம் பழுதற நிரயவே துவுமாம், 'புன்னெஞ்சாலவனும் போய்நர கெய்திப் பூமியுள் ளளவுமே றானால்" என்னும் பெருந்திரட்டுச் செய்யுளையும் இனியாயினுஞ் சிந்தியாரா? ரெட்டிபாளையத்து வியபிசாரம் ஏனோசெய்தார்.

இராமலிங்கபிள்ளைக்குச் சிவபெருமானாலே இரசவாதம் உபதேசிக்கப்பட்டதென்றும், அவர் இரசவாதத்தினாலே ஆறுபாரந்தங்கஞ்செய்து வைத்திருக்கின்றாரென்றும், அதுகொண்டு அவர் பார்வதீபுரம் எனப்

பெயர்பெற்ற ஒரு பட்டினமும் அதனுள்ளே ஒரு கனகசபையுங் கட்டுவித்துச் சிதம்பர சபாநாயகனை உலகறிய நடந்து அங்கே வந்து நின்று நிருத்தம் பண்ணும்படி செய்யப்போகின்றாரென்றும், பசித்தவர்கள் எல்லாருக்கும் அன்னங்கொடுக்கவும், வியாதியாளர் எல்லாருக்கும் கல்வி கற்பிக்கவும் போகின்றாரென்றும், அவருடைய மாணாக்கர்கள் கடைதோறும் ஆலயந்தோறும் வீடுதோறும் தெருத்தோறும் வாய்ப்பறை அறையப் புகுந்து பலவருஷங்களாயினவே. அவர் பட்டினங்கட்ட அஸ்திவாரம் போட்டு இரண்டு வருஷத்திற்கு மேலாயிற்றே. இவைகள் இன்னும் நடத்தப்படாததென்னையோ? அவர் தாம் இரசவாதத்தினாலே சம்பாதித்த திரவியத்திலே சிதம்பர சிற்சபா சம்புரோக்ஷணத்தின் பொருட்டு இரண்டு லக்ஷம் ரூபா கொடுத்தற்கு அக்ஷயவருஷ ஆனிமீ சிதம்பராலயத்திலே பலரெதிரே தீக்ஷிதர்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்தாரே! இதுவரையும் அவ்வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாததென்னையோ? அவர் இரசவாதந் தெரிந்தவராயின், ஊர்தோறுந் திரிந்து பலரிடத்தும் பணம் நெல்லு முதலியவை யாசிப்பதென்னையோ? பிறரிடத்து வாங்கிய அற்பக்கடன்களையும் இறுக்கமாட்டாது அவரால வையப்படுவ தென்னையோ? அவர் பதிப்பித்த திருவருட்பாப் பிரதிரூபங்கள் பிறரிடத்தில் அடைமானம் வைக்கப்பட்டிருப்பதென்னையோ? தன்னை இரசவாதியென்பவரிடத்துள்ள வறுமையும், தன்னை மஹா வைத்தியன் என்பவனிடத்துள்ள வியாதியும், தன்னை மஹா வீரனென்பவன்மேலே பிறருமிழ்ந்த தம்பலமும், தன்னை ஞானியென்பவ

னிடத்துள்ள விடயவிச்சையும், அவர்வாக்கைப் பொய்யெனச் சாதிப்பவைகளல்லவோ? அவரும் அவரை நம்புவோரும், "வர்தி வடத்திளமு ம்மாமருத்து வன்பிணியுஞ் - சாதித்த வீரன்மேற் றம்பலமுந் - தீதுதபோன் - ஞானத்தி னின்மை நசிப்பித்து ஞானதவா - மூனத்தை யாரொழிப் போர்" என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளைச் சற்றே சிந்திக்கக்கடவர்கள்.

இராமலிங்கபிள்ளையினுடைய மாணாக்கர்கள், தாங்கள் அவர் சிவாநுபூதி பெற்றவரென்றும், இரசவாதந்தெரிந்தவரென்றுங் கொண்டது சத்தியமேயானால், இச்சென்னபட்டினத்திலே பலரிடத்துஞ் சென்று சேவித்துப் பலவாறு வருந்திச் சீவனஞ் செய்து கொண்டலைவதென்னையோ? தங்களாலே முன்பு வசைப்பாட்டுப் பெற்றவர்களைப் பின்பு தோத்திரஞ்செய்து மதுமாமிசங்களின் பொருட்டு இரண்டணா, ஓரணா யாசித்துத் திரிவதென்னையோ? பிறரோடு கூட்டுவியாபாரஞ் செய்யப்புகுந்து அவர்பொருளைக் கைவசப்படுத்திக்கொண்டு அவர் வாயில் மண்போடுவதென்னையோ? தாசிகளிடத்துந் தட்டார்களிடத்துஞ் சென்று சிவபத்தி காட்டி நடித்து ஆபரணங்களை இரவலாக வாங்கிக்கொண்டு ஓட்டம் பிடிப்பதென்னையோ? அவர்களெல்லாருங் கருங்குழிக்குச் சென்று அவ்விராமலிங்கபிள்ளையைத் தரிசித்தலாகிய பேரானந்தப் பெருவாழ்வுபெற்று அவருடைய பரிகலசேட பாத்திரசேடங்களைப் புசித்துக் கொண்டிருக்கலாமே!!! அப்படிச்செய்யாமையால், அவர்வேடம் பொய்வேடம் என்று அவர்களே தெளிந்திருக்கின்றார்களென்பது இனிது விளங்குகின்றதே! விளங்கவும், உலகத்தாரை மருட்ட அசத்தியம் பேசுகின்றார்களே!

" சுத்த பரிமளகத் தூரிமானண்டத்தே
வைத்த பிரமன் மதிகேடன் - சத்தியமே
தானொருகா லுஞ்சொல்லா தார்நாவில் வையேனோ
யானொருகால் வேதனை நூல்."

இராமலிங்கபிள்ளை ஆகாயகமன குளிகை செய்து சென்னபட்டினத்தினின்றுந் தம்மைத் தரிசிக்க வந்த மாணுக்கர்கள் இருவருக்கு ஒவ்வொரு குளிகை கொடுக்க, அவர்கள் அக்குளிகையை உட்கொண்டு கூடலூரினின்றும் இரண்டுதென்னமர வுயரத்தின் மேற்படப் பறந்து இரண்டுநாழிகைப்பொழுதினுள்ளே சென்னபட்டினம் அடைந்தார்கள் என்று அவர் மாணுக்கர்கள் வாய்ப்பறை அறைகின்றார்களோ ? இராமலிங்கபிள்ளை இச்சென்னபட்டினத்திற்கு வந்து இவ்வற்புதத்தை எல்லாருங்காணச்செய்து காட்டுவாரா?

இராமலிங்கபிள்ளை ஏறக்குறையப் பத்து வருஷத்திற்குமுன்னே சிதம்பரத்திலே தம்மோடு சில உத்தியோகஸ்தர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களைப் பிரிந்து சற்றே தூரத்திற் சென்றிருந்தாரென்றும், அவர்கள் "அங்கே போயிருப்பது என்னை?" என்று வினவியபோது "சென்னபட்டினத்திலே இப்போது என்மனைவி இறந்துவிட்டாள் ; அது எனக்கு இங்கே தெரிந்தது" என்று சொன்னாரென்றும், மூன்றுநாள் சென்னபட்டினத்திருந்து அம்மரணசமாசாரக்கடிதம் வந்தமைகண்டு ஆச்சரியமடைந்து அவ்வுத்தியோகஸ்தர்கள் அன்றுமுதல் அவரைச் சருவஞ்ஞரெனக் கொண்டு வழிபடுகின்றார்களென்றும், அவர் மாணுக்கர்கள் எங்கெங்கும் பாராட்டிக் கொண்டு திரிகின்றார்களே? ஓகோ! கெட்டி கெட்டி! அவர்மனைவி ஒருத்தியே. அவள் இச்சென்னபட்டி

னத்தினும் இதனைச் சார்ந்த இடங்களினும், ஒரு பர தேசியோடு கூடி இன்றுவரையுஞ் சஞ்சாரஞ் செய்து கொண்டு திரிவதை யாருங்காணலாம் காணலாம். பிள்ளையும், மாணுக்கர்களும்போல முழுப்பூசினிக்காயைச் சோற்றுக்குள்ளே புதைக்க வல்லவர் வேறியாவர்? இராமலிங்கபிள்ளை, தாம் சர்வஞ்ஞராகிய சிவபெருமானயிருந்தே உலகத்தாருய்யும்பொருட்டுக் காளகண்டம், திரிநேத்திரம் முதலியவைகளை மறைத்து எழுந்தருளிவந்தது சத்தியமேயாயின், தம்மனைவி பின் இவ்வியல்புடையவளாவாள் என முன்னறியாது விவாகஞ் செய்துவிட்டுப் பின்பழிக்குப் பயந்து சென்னபட்டினத்தை விட்டு ஓட்டம் பிடிப்பாரா? ஆச்சரியம் ஆச்சரியம்! சூனியஞ் செய்து ஒருவனைக் கொல்வேனென்று ஆயிரம் ரூபாச்சவரன் வாங்கிய இவரா வள்ளலாவார்?

இதுவரையுஞ் சொல்லப்பட்டவைகளினலே, இராமலிங்கபிள்ளை ஓதாதே எல்லாமறிந்தவரென்பதும், சிவபெருமானைச் சாக்கிரத்தே தரிசித்தவரென்பதும், திருவருளைப்பெற்றவரென்பதும், திருவருளைப் பிரசாதிப்பவ ரென்பதும், அற்புதங்கள் செய்ய வல்லவரென்பதும், இரசவாதந் தெரிந்தவரென்பதும், அசத்தியமே என்றும், அவருக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் பெயரும், அவர் பாடலுக்குத் திருவருட்பாவென்னும் பெயரும் இடப்பட்டது நகைப்புக்கிடமேயாமென்றும், இராமலிங்கபிள்ளையும் அவர் மாணுக்கர்களும் உலகத்தாரை வஞ்சித்துப் பொய்ப் புகழ்பெற்று வயிறுவளர்க்கப் புகுந்தவேடங்களே இவைகளென்றும், பசுமரத் தாணிபோற் பதித்து நாட்

டப்பட்டன. கொட்டையூர் மகாவித்வான் சாமிநாத தேசிகர் அவர்களும், திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் இராமலிங்கபிள்ளையென்பாரைக்கண்டு அவர்பாடல்களிலுள்ள, சித்தாந்தத்திற்கும் இலக்கணத்திற்கும் மாறாய் பாடல்களையெடுத்து வினவுழி விடைகூறவியலாது, விழித்து ஓட்டம்பிடித்தமை யாவருமறிந்த தொன்றே.

இவ்வுண்மையை அறியாது, சிலர் தேவாரமுதலிய அருட்பாக்களோடும் இராமலிங்கபிள்ளை பாடலைச் சமமாகப் பாராட்டியும், சிலர் அப்பாடலைக் கைவிட்டு இப்பாடலையே பாராட்டித் துரபிமானத்தினாலே தேவாராதிகளைத் தூஷித்தும், எரிவாய் நரகத்துக்கு இரையாகின்றார்கள்.

சில செல்வர்கள், இராமலிங்கபிள்ளை பாடலைத் தாங்கள் பாராட்டியது தப்பென்று விவேகிகளாலறிந்தவிடத்தும், தங்கள் பெயர் அவ்விராமலிங்கபிள்ளை சரித்திரத்திலே பாடப்பட்டமையால் பிற்காலத்திலே இராமலிங்கபிள்ளையைச் சிவாநுபூதிமானெனக்கொள்பவர்களெல்லாரும் தங்களைச் சிவாநுபூதிமானையடைந்த மெய்யன்பரெனக் கொள்வார்களென்னுந் துரபிமானத்தினாலே முன்போலவே பாராட்டிக்கொண்டு வருகின்றார்கள். ஐயையோ! அவர்கள் அதுமட்டோ, தங்களிச்சைக்கேற்றபடி ஒழுகுங் கோயிலருச்சகர் சிலர்பொருட்டுச் சில தேவாலயங்களிலே தேவாரஞ் சொல்லப்புகுந்த பரம்பரை யோதுவார்களைச் சிவசந்நிதியிலே துர்ப்பாஷைகளினால்வைது அடித்து ஓட்டுதற்குத் துணை செய்தார்கள். ஓகோ அது மட்டோ, அவ்வருச்சகர்கள் கல்வியறிவில்லாத ஒருவன் போல்

எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய "சிவாலய குருமான்மியம்" என்னும் புத்தகத்திலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உண்மை முத்தி கிடைக்கவில்லை என்றெழுதிய குழறுபடையைக்கேட்டும், சிவசிவ! அவ்வதிபாதகனைப் பாராட்டிப் பலரெதிரே அவனுக்குச் சம்மானஞ்செய்தார்களே? இந்நகரத்துப் புலவர்களிற் சிலர், ஹரஹர! அப்பெருங் கொடும்பாவிகள் சபையிலிருந்து அதனைக்கேட்டு மௌனமாய்த் திரும்பினார்களே! சிவதூஷணஞ்செய்த தக்கன் பட்டபாடும், அதனைக் கேட்டுக்கொண்டிருந்த தேவர்கள் பட்டபாடும் அறியார்களா? அறியார்களா? சிவபெருமான் தம்மைத் தூஷித்தலைப் பொறுப்பினும், தம்மெய்யன்பர்களாகிய சமயாசாரியர்களைத் தூஷித்தலைப்பொறுப்பாரா? பொறுக்கமாட்டாரே! பொறுக்கமாட்டாரே!!

சில மூடர்கள், இராமலிங்கபிள்ளையையும் அவர் பாடலையும் பாராட்டுவோர் அறவரென்றும் பாராட்டாதவர் மறவரென்றும், வேலுமுதலியார் பாடிய "தனித்துரைத்த விராமலிங்கத் தனிமறையர் தரித்துய்ந்தாரினித்தவருட் பிரகாச வள்ளலென விணிதேத்தி - யகித்த மற்றோர் சிலவறவ ரந்தோவென் போன்மறந்து - மனித்தனெனக் கொண்டொழிந்தார் மலவாழ்விற் சிலமறவர்" என்னும் பாட்டினாலே மயங்கி, நாம் பாராட்டாதொழிந்தாற் பிறரால் மறவரென்றிகழப்படுவோம் என்று பயந்து பயந்து பாராட்டுகின்றார்கள். அது சில பட்டுநூற்காரர்கள் "இப்பீதாம்பரம் பதிவிரதைகள் புத்திரருக்கன்றி வேசைகள் புத்திரருக்குத் தோன்றாது" என்றெப்பித்த சூனியப்பொருளை ஓரரசனும் மந்திரிமுதலாயினோருங் குடிகளும் தனித்தனியே அகத்திலே

"இப்பீதாம்பரம் எனக்குத் தோன்றவில்லையே நான் மாத்திரம் வேசைமகனுனேனே! பிறரெல்லாருங் கற்புடைமகளிர் மக்களாயினர்களே" என்று கவலை கொண்டு புறத்திலே "இப்பீதாம்பரம்போல நானெங்கும் பார்க்கவில்லை பார்க்கவில்லை" என்று ஒருங்கொத்துப் பாராட்டிய கதைபோலாகும்.

இப்பிரபந்தத்தை எல்லாருஞ் சித்த சமாதானத்தோடு வாசித்து, "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய்மலர்ந்தருளியபடியே உண்மையைத் தெளிந்து, பசுவாக்கியங்களைக் கைவிட்டுப் பதிவாக்கியங்களாகிய தேவாரமுதலிய உண்மை நூல்களையேகைக்கொண்டு விதிப்படி சிரத்தையோடு ஓதியுணர்ந்துய்யக்கடவர்கள்.

### திருவிசைப்பா.

"எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித் திடப மேறி
யச்சங்கொண் டமர ரோட நின்றவம் பலவற் கல்லாக்
கச்சனைக் கல்லாப் பொல்லாக் கயவனைப் பசுநூல் கற்கும்
பிச்சனைக் காணு கண்வாய் பேசாதப் பேய்க ளோடே."

இராமலிங்கபிள்ளையாலே பசுத்துவநீங்கிச் சிவத்துவம்பெற்றவர்களென்று அவர் சரித்திரத்திலே பாடப்பட்டவர்களுள்ளே யாவராயினும், இப்பிரபந்தத்திலே தப்புக் கண்டார்களாயின், நியாயமெடுத்துக் காட்டி வாதிக்கக் கடவர்கள். அது கூடாதவழி, நம்மை ஊமையாக்கித் தம்மாசாரியர் பெருமையையும் தம்பெருமையையும் உலகறிய வெளிப்படுத்தக்கடவர்கள். அவர்கள் அதுவுஞ் செய்யாதபோது, திருஞான

சம்பந்தமூர்த்திநாயனூர் முதலானோரை அவமதித்து இராமலிங்கபிள்ளையை நன்கு மதிக்கும் பிரபுக்கள் அப்பிள்ளை மாணுக்கர்களைச் செவியிலே பிடித்துக் கொண்டு "திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுருடைய மாணுக்கர் அவர் திருச்சின்னத்தைத் தடுத்த புத்தநந்தி தலையிலே இடிவிழச்செய்தார்களே. இராமலிங்கபிள்ளையைக் கண்டிப்பவனை நீங்கள் ஊமையாக்க மாட்டீர்களா" என்று கேட்கக்கடவர்கள். இவைகளெல்லாஞ் செய்யாது வாயில் வந்தபடி நம்மைத் தூஷிப்பது குலத்திற் பிறந்தாருக்கு அழகன்று. இதனைச் சிந்தியாது தூஷிப்பவர்களுக்கு நாம் எடுத்துக்காட்டுஞ் செய்யுளொன்றுண்டு.

திருவிளையாடற்புராணம் இசைவாதுவென்றபடலம்.

செய்யும் பூங்குழன் மடவரா ளின்னொடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுன்போ
லுய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்.

இராமலிங்கபிள்ளை பாடலைக்குறித்து, அவர் மாணுக்கரிருவருக்கும், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சீடரும், இலக்கண விலக்கியங்களிலும் சைவசித்தாந்த நூல்களிலும் வல்லவரும் இராமநாதபுர சமஸ்தான வித்துவானும், மதுரைத் திருஞான சம்பந்தசுவாமிகளாதீனத்து ஸ்ரீ சின்னச் சந்நிதானத்திற்குக் கல்வியில் உசாத்துணைவருமாகிய ஸ்ரீமந் இராமசுவாமிப் பிள்ளை அவர்கட்கும், மதுரைச் சோமசுந்தரக்கடவுளாலயத்திலே பலரெதிரே நடந்த வாதத்தை, உலகத்தார் அறியும்பொருட்டு, அவ்விராம சுவாமிப்பிள்ளை ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர்

அவர்களுக் கெழுதிய விண்ணப்பத்தை இங்கே பதிப்பிக்கின்றேன்.

---

"சிவஞானச் செல்வர்களாகிய மஹாராஜராஜஸ்ரீ அண்ணு அவர்கள் திவ்ய ஸமுகத்துக்கு எழுதிக்கொள்ளும்

**விண்ணப்பம்.**

இம்மதி முதலிலே சென்னையிலிருந்து ம-ள-ள-ஸ்ரீ ஐயாசாமிமுதலியாரவர்கள் ம-ள-ள-ஸ்ரீ வாசுதேவ முதலியாரவர்கள் ம-ள-ள-ஸ்ரீ சோமசுந்தரச்செட்டியார் என்னும் பிரபுக்கள் மூவரும் சுவாமிதரிசனார்த்தம் மதுரைக்கு வருவதாக ஸ்ரீ பண்டாரச்சந்நிதிகளுக்குச் சென்னை ஒதுவார் விண்ணப்பம் வந்திருந்தது.

அவ்வண்ணமே இம்மதி அ௳ சோமவாரத்திரவிலே அம்மூன்று பிரபுக்களும் அவர்களைச் சேர்ந்த சிலரும் அதற்கு நாலுதினத்திற்கு முன்பு திருப்பாலைவனம் ஸ்ரீ சுந்தரக்குருக்களும் காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சபேசக்குருக்களும் வந்துசேர்ந்தார்கள். * * *

இரண்டுதினஞ் சென்றபின் ம-ள-ள-ஸ்ரீ விஜயரங்கமுதலியாரவர்களும் வந்து சேர்ந்தார்கள். பிரபுக்கள் யாவரும் ஒருங்கே பத்தியுடனே சிவாலயசேவை செய்தார்கள். திருப்பரங்குன்றத்துக்கும் போய் வந்தார்கள்.

புதவாரத்திரவு பிரபுக்களுடன் வந்த முத்துச்சாமிமுதலியெனப் பெயரிய ஒருவர் மடத்துக்கு வந்து, ஸ்ரீ சின்னச்சந்நிதானத்தைத் தரிசித்துப் பலவார்த்தைகள்பேசிக் "கருங்குழி இராமலிங்கபிள்ளையவர்களுடைய முதன்மாணக்கரும், இலக்கணவிலக்கிய வேதாந்த சித்தாந்தங்களிற் பண்டிதரும், எடுத்த

யாரென்பவர் பிரபுக்களுடன் வந்திருக்கின்றார். எடுத்தவிடயங்களை ஸ்தாபிக்க வல்லுநருமாகிய வேலுமுதலியார் சந்நிதானதரிசனத்துக்கும் நாளை வருவார். வந்தபின்பு வெளியாம்" என்று சொல்லி, "இராமலிங்கபிள்ளையவர்கள் அருளிச்செய்த திருவருட்பா இவ்விடத்துக்கு வந்திருக்கின்றதா?" என்று வினவினர். "வரவில்லையே" எனக்கூறியவழி, "சென்னை சேர்ந்தபின்பு அனுப்புவதிற்றடையில்லை' என்று "அதிலடங்கிய திருப்பாசுரங்கள் இவை" என்று சில பாடல்களைச் சொல்லித் தாமே அருமைப்பட்டுக் கொண்டார். [சென்றவருடத்திலே இராமலிங்கபிள்ளை கூட்டத்திற் சேர்ந்த ஒரு பரதேசி இவ்விடத்துக்கு வந்து ஸ்ரீசந்நிதானத்திலே இராமலிங்கபிள்ளை கவிகளைக் கழறிப் பாராட்டி, நன்னூல் விருத்தியுரைப் பாடங் கேட்கப் புகுந்து, சிலநாட்சென்றபின் சில மாயாவாத நூலுணர்ச்சி கொண்டு சித்தாந்த வழியை மறுக்கப் புகுந்தார். இராமலிங்கபிள்ளை வீட்டுக்கு நடேசர் வந்து கதவைத் திறப்பித்து இரசவாதத்தைப் புலப்படுத்தியும், சிலபோது கட்டமுது கொடுத்துஞ் செய்தாரெனும் மருளையும், தண்ணீரால் விளக்கெரித்த செய்தி முதலியவற்றையும் பிதற்றினார். உடனே கண்டித்து, மாயாவாதத்தையுமறுத்து இராமலிங்கபிள்ளை, ஒருவர் வழியாக இலக்கணமாதல் சாஸ்திரமாதல் பாடங்கேட்டவரல்லரென்றும்பேசி, அப்பரதேசியையுந் துரத்திவிட்ட] யான் ஒன்று முரையாடாதிருந்தனன். பின்பு "திருவருட்பாவென்று அபிமானித்து இராமலிங்கபிள்ளையவர்கள் பாடலுக்கு நாங்கள் பெயரிட்டிருப்பதைப் பற்றி நாவலர் மறுத்துப் பேசுகின்றார். அது யாருக்குஞ் சம்மதமன்று" என்றும் பிதற்றினார். எல்லாம்

வேலுமுதலியைக் கண்டவழிப் பேசவேண்டுமென வாளாவதிருந்தனன். குருவாரத்திலே மேற்படி முத்துச்சாமி முதலியாதல், வேலுமுதலியாதல் மடத்துக்கு வரவில்லை.

சுக்கிரவாரத்திலே சுவாமிக்கு அபிடேக முதலியன செய்வித்து அத்தமயனத்திற்கு மடத்துக்குப் போய்க் குருதரிசனஞ்செய்து உடனே விடைபெற்றுக்கொண்டு, ஸ்திரவாரத்திலே பிரயாணஞ்செய்ய நிச்சயித்திருந்த பிரபுக்கள் கருத்தைக் கேள்வியுற்றேனுகையால், அற்றைநாள் அதிகாலையிற் பூசை முடித்துக்கொண்டு வழக்கப்படி திருக்கோயிலுக்குச் சென்று, சிவபெருமானைத் தரிசித்து; அவ்விடத்தே வதிந்து, முத்துச்சாமி முதலியைக் கொண்டு வேலுமுதலியை யானிருக்கு மிடத்திற்கு வருவித்து வைத்துக்கொண்டு, சில பட்டமார், சில ஓதுவார், சில செட்டிமார் முதலிய பலர் முன்னிலையில் வேலுமுதலியுடன் இஷ்டம்போலப் பலபல வார்த்தைபேசிச் சித்தாந்த விஷயங்களிலே வினவத்தொடங்கி, "சிவஞானபோதம் அதிகாரம், இயல், பாத முதலியவைகளால் எத்துணைப் பகுப்புடையது? முதன் மூன்று சூத்திரங்கள் முறையே திரிபதார்த்தங்களில் எவற்றைச்சொல்லுகின்றன? விஞ்ஞானுகலர் பிரளயாகலர் சகலராவார் யாவர்? சொல்ல வேண்டும்" என்று கேட்டேன். "சிவஞானபோதம் எட்டுப் பிரிவினையுடையது. பெயர் யாதில்லை. முதற்சூத்திரம் சங்காரத்தைச்சொல்லிச் சிருட்டிப்பதைச் சொல்லுமுகத்தாற் பதியுண்டென்று சொல்லுகின்றது. அது பயனுக்குப் பயனுகக் கொள்ளவேண்டும். இரண்டாஞ் சூத்திரம் பசுவுண்டென்று சொல்லுகிறது. மூன்றுஞ் சூத்திரம்

பாசமுண்டென்று சொல்லுகிறது. விஞ்ஞானகலர் பிருங்கி முதலாயினோர், சிலர் சதாசிவாதிகளாகச் சொல்லுவர். பிரளயாகலர் பிரமன் முதலாயினோர், சிலர் உருத்திரராதியாகச் சொல்லுவர். சகலர் மாநு டர், சிலர் விஷ்ணுவாதியாகச் சொல்லுவர். இவை மூலாகமபேதம்" என்றும், "சிவஞான சித்தியார் பார்த்தபின்பு முடிவிலே ஒழிவிலொடுக்கம் பார்க்கவே ண்டும். இது எங்கள் குருமரபு" என்றும், இன்னும் பலபல விதமாகக் குழறினர். "சித்தாந்த சாஸ்திர விஷயத்திலே இவ்வளவு தெளிவாக யாவர் சொல்ல வல்லார்" என்று நகைத்து மெல்ல மெல்ல அருட்பா விஷயத்திலே கொடுவந்து, "தேவார முதலிய பன் னிரண்டு திருமுறைகளும் திருவருளினலே பாடப் பட்டனவே. அவற்றுள் பத்தாந் திருமுறையாகிய திரு மந்திரம் துதிரூபமல்லாமையாலும், பதினோராந்திரு முறைப் பிரபந்தங்கள் பெரும்பாலும் பண்ணுக் கிசை யாத பாவினங்களாகியும், விநாயகக்கடவுள் முருகக்கட வுள் நாயன்மார் இவர்கள் பரமாகவிரவியுமிருத்தல் முதலிய காரணம்பற்றி அவ்விரண்டு திருமுறைகளல் லாத தேவாரம், திருவாசகம்,திருவிசைப்பா, திருப்பல் லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்தும் மிக்க சிறப் பாக எடுத்துச் சிவாலய முதலியவிடங்களிலே நித்திய நைமித்திகங்களிலே பண்டைக்காலந் தொடங்கி ஓதப் பட்டு வருகின்றன. இவை யோகரூடியாக அருட்பா வென்று ஆன்றோராலே தொன்றுதொட்டு வழங்கப் படுகின்றன. அருட்பாவெனும் பெயர் காரணங்கருதா வழி இடுகுறி மாத்திரையாகத் தேவார முதலியனவற் றிற்கே சென்றும், காரணங்கருதியவழி ஏனைய அருட் பெற்றோராற் பாடப்பட்ட பாவுக்குச் சென்றும் வரு

கின்றது. இத்திருநாமம் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய பதினான்கிற்கும் மெய்கண்ட சாத்திரமெனவும், திருவாய்மொழி திருமொழி முதலியவற்றிற்குந் திவ்விய பிரபந்தமெனவும் வழங்கிவருதல் போலும். இங்ஙனமாக விபூதி ருத்திராக்ஷத்திற் குடன்பட்ட இராமலிங்கபிள்ளை தம்பாட்டுக்குத் திருவருட்பாவெனப் பெயரிட்டதும் முறைகள் பிரித்ததமை முதலியவும் முறையா" என்று கேட்டேன். "தேவார முதலிய பன்னிரண்டற்கும் அருட்பாவென்னும் பெயர் சென்னை முதலிய விடங்களில் வழங்கவில்லை. எங்களாற் பதிக்கப்பட்ட பின்பு, நாவலர் பெரியபுராண வசனத்திலே அப்பெயர் காட்டியும்; துண்டிவிநாயகர் திருவிருத்த முதலியவற்றிற்குத் துண்டிவிநாயகர் திருவருட்பா, கதிர்காமவேலர் திருவருட்பா எனக்கற்பித்தும் பதிப்பித்திருக்கின்றார்" என்று வேலுமுதலி கூறினர். சிவாலயம், ஆதீனம், மடாலய முதலியவற்றினெல்லாம் தேவார முதலிய பன்னிரண்டற்கும் அருட்பாவென்னுந் திருநாமம் வழங்கிவருவதை ஓதுவார் முதலானவர்களைக்கொண்டு நேரே ஒப்புவித்து "இன்னும் ஆதீன முதலியவற்றில் விசாரித்தால் ஐயந்தீர்ந்துய்யலாம்" என்றும், "இப்போது தேவார முதலியவற்றைத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவையை மாத்திரம் ஓதும் உற்சவமும் உணரப்பெறாது தேவார திருவாசகங்களை ஓதுகிற உம்போலிகட்குச் சைவசாம்பிரதாயம் எங்ஙனந்தெரியும்" என்றும், "நாவலரவர்கள் பதினேழு வருஷத்திற்கு முன்பே பரிதாபி வருடத்திற் பதிப்பித்த பெரியபுராண வசனத்தில் விளக்கமாக தேவாரமாதியன அருட்பாவென்று பதிப்பித்திருக்கின்றார்கள்" என்றும், என்னிடத்துள்ள பழைய

பிரதியினும் துண்டிவிநாயகர் திருவருட்பாவென் றிரு க்கின்றது. தருமையாதீன முதலியவற்றினும் அங்ஙன மேயிருப்பதை அறிந்துகொள்ளலாம்'' என்றும் "அந் நூலுடையார் திருவருட்பாவென வாளாகூறி மயங்க வையாது, துண்டிவிநாயகர் என்பது முதலிய அடைக ளொடு புணர்த்திக் கூறுதலானும், அவர் அப்பாக்களி லே தம்மைத் திருவருள் பெற்றவரெனச் சிறிதுங் கூறாது தாந்திருவருள் பெறாதவரெனக் கூறித் தமக் குத் திருவருள் கிடைத்தல் வேண்டுமென்று வேண் டிக்கோடலானும், அங்ஙனமாகவே திருவருட்பாவெ ன்பதற்கு அவர் கருத்துத் திருவருளைப் பெறவிரும் பிய பாவென்பதாகலானும், அது குற்றமாகாதென் றுங் கூறினேன். வேலுமுதலி முத்துச்சாமிமுதலி என்னுமிருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்து, இராமலிங்கபிள்ளை யவர்களுக்காதல் எங்க ளுக்காதல் கருத்தில்லாதிருந்தும் வேறுசிலர் திருவரு ட்பாவெனப் பதிப்பித்து விட்டனர்'' என்றும், "அத னைக்காரணக் குறியாகக் கொண்டாற் குற்றமில்லை'' என்றும், "நாவலரவர்களுக்கும் இதைச் சொல்லிய னுப்பினோம்; பேசாதிருந்தார்கள்'' என்றுங் கூறினர். "மற்றொருவர் பதிப்பிக்க நீங்கள் உடன்பட்டிருந்த லால் உங்கள் கருத்தே அது'' என்றும், "அங்ஙனங் காரணக் குறியானால் அதை வெளியிட்டு ஸ்தாபிக்க லாமே'' என்றும், "எனும்பைப் பெண்ணுக்குதன் முதலியனபோல ஏதேனுங் காட்டப்படுமா'' என்றும் கேட்டேன். "என்பைப் பெண்ணுக்குதலாகிய தேவா ரங்களைக்கொண்டு இப்போது நீங்கள் அப்படியாக்க லாமா'' என்று அவ்விருவருங் கேட்டனர். "இது விருத்தமான கேள்வி'' என்றும், அவ்வத் தேவாரந்

தின் இறுதியிலே ஓதுவோர் பயன்பெறுமாறு வரையறுத்தருளியிருக்கிறதே'' என்றுஞ் சொல்லி, "இராமலிங்கபிள்ளை பாட்டைக்கொண்டு உங்களை அற்புதங்காட்டும்படி யான் கேட்கவில்லை; இராமலிங்கபிள்ளை உயிருடன் இருத்தலால் அவரே பலரும் அறியப்பாடி ஏதேனும் அற்புதங்காட்டும்படி கேட்கின்றேன்'' என்றும் வினவினேன். ஒருத்தரமுங்கொடாது திகைத்துத் திசைகளை நோக்கி விழித்துக்கொண்டு, "எல்லாந் திருவருட்செய்கையானதால் சிலராலே திருவருட்பாவென்றிடப்பட்டது சகிக்கவேண்டும்'' என்று அவர் கூறினர். அங்ஙனமாயின் யான் கூறுவதுந் திருவருட்செயலாதலால் நீங்களே மருண்டு இராமலிங்கபிள்ளை தெருமருட்பாவுக்குத் திருவருட்பாவென்றிட்டபெயரை மாற்றிவிட வேண்டும் என்று யான் கூறினேன். அவ்விருவரும் இனியிருப்பது சரியன்று எனக்கருதி யெழுந்து வணங்கிக் கொண்டுசென்றனர் "ஒழிவிலொடுக்க வுரையை இலக்கண வழுவாகவும், சித்தாந்த சாத்திர விருத்தமாகவும் பதிப்பித்த இராமலிங்கபிள்ளையா சாக்கிரத்திலே நடேசர்வந்து அருள் செய்யப் பெற்றவரும் ஓதாதுணர்ந்தவரு மாவர்'' என்பது முதலியவாக யான் சொன்னவற்றைக் கேட்டுங்கேளாதவராக வாளாபோய் விட்டனர். கூடியிருந்த யாவரும் "இவர்கள் செய்கை பாவச்செய்கை'' என்று அவ்விருவரையும் நோக்கி நகைத்தனர். இன்னும் இடையே பேசினவைபல. அவை விரிக்கிற் பெருகும்.

சுக்கிரவாரத்திரவு ஆறரை மணிக்குப் பிரபுக்கள் யாவரும், கூடவந்தவர்களும் மதுரை யாதீன மடாலயத்திற்கு வந்து உபசந்நிதானங்களையுந் தரி

சித்து ஸ்ரீசின்னச்சந்நிதானம் உபசரித்த அருமை பெருமைகளைப் பாராட்டி மகிழ்ந்தனர். சந்நிதானத்தின் மீது வேலுமுதலி சிலபாட்டுப் பாடியிருக்கிறுரென்று கோயிலிலே முத்துச்சாமிமுதலி சொன்னுர். அது சபையிலே வெளியாகாது ஒளிவாய்விட்டது. உடனே பிரபுக்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஸ்திரவாரத்துக் காலையிலே பிரபுக்கள் திருப்பரங்குன்றத்திற்குப் போய்வந்தார்கள். பகல் மூன்று மணிக்கு ஸ்ரீசுந்தரக்குருக்கள் ஸ்ரீகச்சபேசக்குருக்கள் இருவரும் மடத்துக்கு வந்தார்கள். அவர்கண்மாட்டும் வேலுமுதலியைக் கண்டித்துப் பேசிய விடயங்களை வெளியிட்டேன். மத்தியஸ்தத்திற்குத் தாங்கவில்லாதிருந்ததைப்பற்றிப் பரிதபித்து "நாவலரவர்களைப்போலவே தாங்கள் கண்டித்துப்பேசல் நியாயமே" என்றும் என்னை நோக்கிக் கூறினர். "இராமலிங்கபிள்ளை பாடலுக்குத் திருவருட்பாவென்று பெயரிட்டதைப்பற்றிப் பிரபுக்களும் முனிந்து பேசுகின்றுர்கள்" என்றுங் கூறினர். அவ்வெல்லோரும் ஸ்திரவாரத்திரவிலே, திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் திருவடிக் காட்சிக்குப் பிரஸ்தான மானுர்கள்.

சோமவாரத்திரவிலே, ம-ா-ா-ஸ்ரீ விஜயரங்க முதலியாரவர்களும் மடத்துக்கு வந்தார்கள். திருக்கோயிலின்கண்ணே வேலுமுதலியிடத்தே பேசினவைகளை வெளியிட்டேன் சந்தோஷப்பட்டார்கள்.

* * * *

தாங்கள் வீற்றிருக்குந் தானத்திலே மாசந்தோறுங் குருவாரத்திலே சபைகூட்டிச் சைவப்பிரசங்கஞ் செய்துவருவதையும், கேட்கு முறைப்படி பிரபு பத்தஜனங்கள் வந்து கேட்பதையும் பலமுறை நலமுறக்கேட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

| | |
|---|---|
| மதுரை,<br>சோபகிருது௵<br>கார்த்திகைமீ கஉ.<br>கி-பி ௵ 1852. | இங்ஙனம், மதுரைத்<br>திருஞானசம்பந்தசுவாமிகளாதீனம்<br>☞ இராமசுவாமிப்பிள்ளை. |

சிவமயம்.

க்ருங்குழி

# இராமலிங்கபிள்ளையின் படிற்றொழுக்கம்.

"முக்குண வயத்தின் முறைமறந்தறைதல்" என்னுஞ் செவ்வியமகுடமிட்டு, சுவாமிகள் ஒருவர்எழுதிய விடயத்தைக்கண்டு ஆனந்தித்தேன். சென்னையிலுள்ளார்சிலர் இராமலிங்கரைத்தெய்வமாகக்கொண்டு சிவனையும், சிவனடியாரையும், தேவார திருவாசகாதி திருவருட்பாக்களையும் நிந்திக்கின்றாரென அறிந்தேன். அவர் எல்லாம் இராமலிங்கபிள்ளையின் உள் இரகசிய நடக்கைகளையறியாமையால் அவ்வாறு பாவத்தைத்தேடிக்கொள்ளுகின்றார்கள். குத்தம் பாக்கத்தில் இருக்கும் எனது சகோதரன் குமாரன் ஒருவன் கி-பி-1872ளு ஆகிய ஆங்கிரசளு இறந்தான். அங்குள்ளார், "இராமலிங்கப்பரதேசி செத்தவரை யெழுப்புகிறாராம். அங்கே கொண்டுபோனால் எழுப்பித் தருவாராம்" என்று சொன்னார். நான் என்னுடைய தம்பியைத் தடுத்தும் அவன் கேட்காமல் உறவினரிடம் உத்தரவுபெற்று மனைவி, மருமகள், மற்றைய உறவினர் பலரும் சூழக் கஷ்டப்பட்டு அப்பிணத்தைக்கொண்டு சென்றான். நானும் மிக்க ஆச்சரியங்கொண்டு போயினேன். அங்கே வடலூர்க்குப்போன காலை, ஐயையோ! என்னசொல்லப்போகிறேன். சுமார் இருநூறு விதவைகள் நிறைந்திருந்தார்கள். காலை, மாலை, உச்சி முதலிய காலங்களில் இராமலிங்க பிள்ளையைத் தனியே போய்க்காண வேண்டுமென்ற கட்டளைப் படியே போய்ப் போய்க் கண்டு வந்தார்கள். அதனைப் பார்க்க வேண்டுமென்று போனகாலை, அப்பெண்களை யெல்லாம் நிருவாணிகளாக்கி "கொங்கை குலுங்கக் கொம்மியடியுங்கடி" என்ற தமது பாட்டுக்களைச் சொல்லி யடிப்பித்து இராமலிங்க பிள்ளை பார்த்திருந்தார்.

அங்கே பலபல பிணங்கள் புதைக்கப்பட்டும், புதைக்கப்படாமலும், வேற்றிடத்திற் புதைப்பித்த

பிணங்களின் எலும்புக் காவடிகள் வந்து நிறைந்தும், எலும்புமலைகள் பரந்தும், அழுவாரும், விழுவாரும், புருஷனை யுயிர்ப்பிக்கலாமென்று வந்து வேறு புருடர்களை யிழுத்துக்கொண்டு போவாரும், கள்ளப்பிள்ளை வாங்கினரும், அதனால் என்செய்வோமென்று கருப்பஞ் சிதைப்பாரும், அம்மருந்தினற் பிள்ளையும் தாயும் ஆக இறப்பாரும், புருடனிறக்கவும் நகைகளிட்டும், மஞ்சள், குங்குமம், தாலி யிவை யணிந்திருப்பாரும், இராமலிங்கபிள்ளையும் ஆஷாடபூதிச் சீடர்களையும் நம்பி என்பிள்ளைபோயிற்று, நகைகள் திருடப்பட்டன; பொருள்கள் கவரப்பட்டன என்று மாரிற் குத்தியழுவாரும் ஆன பிரலாப வேடிக்கைகள் என்னுரைத்து முடியா. சிற்சில பணக்கார வீட்டுப் பெண்கள் வந்து தம்புருஷனை யுயிர்ப்பிக்கலாமென்று நெடுநா ளிருந்தனர். அவர்களின் நகைகளை மெது மெதுவாகப் பிடுங்குவித்துக்கொண்டே வந்தார் இராமலிங்கபிள்ளை. அவர்கள் நான் போயிருந்த காலை இராமலிங்க பிள்ளையிடம் வந்து "சாமீ எப்போது எங்களவர் வருவாங்கள்; தங்கட்குக் கருணையில்லையே. நாங்கள் வந்து மூன்றுவருஷம் நான்கு வருஷங்களாகின்றனவே. இதுவரையும் எழுப்பித்தருகிறேம்; எழுப்பித்தருகிறேம் என்று தவணை சொல்லிச் சொல்லி வருகிறீர்களே" என்று கூச்சலிட்டார்கள். "அப்போது பிள்ளை சொன்னதாவது-" அம்மணிமார்களே! பொறுங்கள்; அவசியப்படவேண்டாம். செல்லம்மாளின் புருஷனது தேகம்முழுதும் சரியாய்ப் போயிற்று. இன்னுஞ் சிலநாளுள் வருவார். அந்த அம்மையார் புருஷன் இராத்திரியங்கே கூடாரத்துக்கு வருவார். ஆனற் பேச்சுமாத்திரம் வேருகஇருக்கும். மற்ற அம்மையார் கணவன் தேகம் எல்லாம் பொருந்தியும் கண்ணொளி படைக்கவில்லை. வெள்ளிக்கிழமை வருவார். என்று இப்படி யொவ்வொருவர்க்குஞ் சொல்லிவந்தார். அவர்களுள் ஒரு மாதானவள் "எனக்குப் புரு

ஷனும் வேண்டாம் திருடனும் வேண்டாம்; என் பணத்தைக் கொடுத்துவிடும்'' என்று கேட்டாள். அப்போது கருங்குழிக் கணக்கப்பிள்ளையார் கோபித்து, தம் சீடரென்றிருந்தாருள் ஒருவரை நோக்கி, (அவர் பெயர் எனக்கு ஞாபகத்திலில்லை) முதலியே! உன்னாலேதான் இத்தனை வருத்தம். பார்த்தாயா சிறுக்கி பேசுவதை. அவளெலும்பைக் கொடுத்து அனுப்பிவிடு என்றார். அந்தச்சீடர் கூசாமல் அந்த மாதின் கையைப் பிடித்துச் சென்றார். அப்பாலென்ன நடந்ததோ அறிகிலேன்.

வேறு சில பொருட்காரர்களின் பிணங்கள் வந்து மூன்று நான்கு நாட்களாயினமையால் கெட்ட நாற்றஞ் சகித்திருக்க முடியவில்லை. அப்பிணங்களைப் புதைக்கச் சொன்னார். பிணங்களுக்கு உடையவர்கள் இப்போ தெழுப்புகின்றீரா; அல்லது முடியாதா? என்று கேட்டார்கள். இவ்வகைக் கண்டிப்பான கேள்விகளுக்குப் பதில் கிடையாது; போங்கள். என்றார். அவர்கள் பலவாறு நிந்தித்துக்கொண்டு சென்றார். எங்கள் பிணத்தைக் காட்டியபோது அவ்வுடலத்தினுள்ள அடையாளங்களையும் பெயர், ஊர், தகப்பன், தாய், மனைவி யிவர்கள் பெயர்களையும் பேரம்பலக் கணக்குப் புததகம்'' என்ற கணக்குப் புத்தகத்திற் பதிவிக்கும்படி கூறினார். பதிக்குந் தொழிலுடையவர் இருபது ரூபா உத்தரஞான சிதம்பரங் கட்டுவதற்காகக் கொடுக்கவேண்டும்; அல்லது பதிக்கமாட்டோம் என்றார். உயிர் பெற்றால் 500-ரூபாக் கொடுக்கிறோ மென்றேம். அப்பிணம் உயிர் பெற்றெழாவிட்டால் வாங்கிய இருபது ரூபாவும் திருப்பிக்கொடுக்கப்படுமென்றார். நம்பிக்கொடுத்தேம்; பதிந்தார். தவணை 3-மாதங் கொடுத்தார். "உத்தரகிரியைகள் செய்தாற் காரியங்கெட்டுப்போம்; மனைவியின் மங்கிலியங் கழுத்திலேயே இருக்கவேண்டும்.'' என்று இராமலிங்கபிள்ளையே சொன்னார். அவ்வாறே மூன்றுமாதம்

இருந்தேம்; ஆறுமாதம் இருந்தேம்; ஒன்பதுமாதம் பொறுத்தேம்; எழுப்பவில்லை. அநேகரிடத்திற் காசு வாங்கிவிட்டதனுற் பெரிய மனுஷர்கள் எல்லாரும் நிந் திக்கத் தொடங்கினர். கொன்றுவிடுகிறுே மென்றுஞ் சிலர் நெருங்கினர். ஊர்கடோறும் இவர் பொள்ளல் வெளிப்பட்டது. கிறிஸ்தவர், பௌத்தர் முதலினோர் "உங்கள் சாமிகள் என்பாரின் பொய் புரட்டுக்களைப் பார்த்தீர்களா? இப்படித்தான் ஞானசம்பந்தர் கதைக ளும் இருக்குமென்று அநேகரைத் தம் மதத்திலிழுத் துக்கொண்டனர். இவற்றைக்கேட்டுச் சைவத்தைக் கெடுக்க இராமு பிறந்தாரே என்று வருந்தினர். வை ணவருக்குள் வடகலை தென்கலைச் சண்டைபோலச் சைவர்களையும் சண்டையிடும்படி இராமலிங்கர் தமக் கு வள்ளலார் என்றும், பாடல்களுக்குத்திருவருட்பா என்றும் வைத்துக்கெடுத்தனர் என விசனித்தார் பலர். இந்தியாவெங்கணும் இராமலிங்கபிள்ளையின் புரட்டும் பொய்யுந் தெரிந்தன. வளவனூரிலிருந்து ஒரு ரெட் டியார் மனைவி புருஷனைப் பெறச்சென்று பிள்ளை பெ ற்றது யாரறியார். இப்போதும் அவள் சாதியால்நீக்கப் பட்டுப் பரிதபிக்கிறுள். அது அவ்வூர் மாதவரெட்டி யாரை விசாரித்தால் தெரியும். தெரியும்.

இராமலிங்கபிள்ளை யிவைகளை யெல்லாம் அறிந் தும், தமயனும் தன் ஆசிரியருமாகிய சபாபதிப்பிள்ளை அவர்கள் அங்கதப்பாட்டெழுதி வெளியிட்டதையும், ரெட்டிபாளையத்தில் தாம் செய்த வியபிசாரத் தொ ழிற் பழியையும், செத்தவர்களை யெழுப்புவேமென்ற பழியையும், மனைவி பண்டாரத்துடன் கூடித்திரிவத னையும், அற்புதங்காட்டுகவென்று பலர் வருத்துவதனை யும், ஜமீந்தார் ஒருவரிடம் ஆயிரம் ரூபாச் சவரன் வாங்கியகாலை அவர் வந்து நெருக்கியதையும் அறிந் தும் இராமலிங்கபிள்ளை யவமானமுந் துக்கமுஞ் சா கரம்போற் பெருகித்துன்பஞ்செய்ய, சமாதிக்கென்று கட்டிவைத்த அறைக்குள் ஓடிப்போய்ப்புகுந்து கார்ப்

பூரத்தி னடுவிலிருந்து உயிரைவிட்டார். ஆங்கால மெல்லாம் அவமே மொழிந்து சாங்காலஞ் சங்கரா சங்கரா என்றாற்போல இந்தப்பழி நிந்தைகளைச் சகிக்கமாட்டாது இராமலிங்கபிள்ளை பலவாறு அழுதா ரழுதார். உயிர்விடுவேனென்று புலம்பினார். அதற்கும் சுவாமி வராமைகண்டு தாமே தம்முயிரை மாய்த்துக்கொண்டார். இங்ஙனம் செத்தவரை யெழுப்புவேமென்று எழும்பினவர் செத்தார். பத்துநாட் சென்ற பின் திறந்து பார்க்குங்கால் அழுகி யொழுகி நாற்றம் பிடித்திருந்தது. அதனைக் கண்டவர் யாவரும் இப்படியா சமாசாரமென்று போய்விட்டார். இராமலிங்கப்பிள்ளையின் சீடராயிருந்தார் சிலர் இராவிராவாக அந்நாறிய வுடலையெடுத்து வேறோரிடத்திற் புதைத்துவிட்டு மறுநாள் திறந்துகாட்டிச் சுவாமிகளைக்காணோம். அவர் செத்தாரென்று நினைக்கிறீர்கள்; சாகவில்லை. வருவேனென்று சொல்லியிருக்கிறாரென்று ஒரு கதை கட்டிவிட்டனர். இது சத்தியம். சத்தியம். உயிர்ப்பிக்க வந்திருந்தவர்க ளெல்லாரும் வாயிலடித்து அழுது புறப்பட்டார். இலவுகாத்த கிளியாயினர். வடலூர் வெளியே! நீ இத்தனை விநோதஞ் செய்தனையே. நீயாபேரம்பலமும், உத்தர சிதம்பரமுமாவாய். இராமலிங்கம் செத்தவர், எந்த விடத்திற் கிடக்கிறாரோ தெரியாது. உலகீர்! உண்மைச் சைவர்களே! இராமலிங்க பிள்ளை பாடல்களைக் கையாற் பரிசித்தாலும் அதிபாதகம் அதிபாதகம். அவருடன்கூட இருந்த அநுபவி சொன்னேன். சொன்னேன். இதுபோது இவ்வுண்மைகளை யெல்லாந் தெரித்துப் பன்னிரு திருமுறைகளை திருவருட்பா என நிறுவிநிற்கும் மதுரை நான்காஞ் சங்கப்புலவரான யாழ்ப்பாணம் ஸ்ரீமந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கட்குச் சைவர்கள் எவருங் கடமைப்பாடுடையரே.

இங்ஙனம்

சோர்க்கபுர ஆதீனம் இராமலிங்கத்தம்பிரான்
சுவாமிகளின் மாணாக்கரான
நெ. சிவக்கொழுந்துமுதலியார்.

இது, முன்னர்க்
குதர்க்கராரணிய நாசமகாபரசு கண்டனம்
என்னு நூலில் வெளியிடப்பட்டது.

இராமலிங்க பிள்ளையும், அவரது ஆஷாடபூதிச் சீடர் சிலரும் வடலூர் வெளியிலிருந்துகொண்டு, செத்தவர்களையெழுப்புவோமென்று பற்பலவூர்களில் இருந்துவந்த விதண்வகளிடத்துள்ளபொருள்களைக் கவர்ந்தும், நகைகளை வாங்கியும், கற்பழித்தும், கருப்பங்கொடுத்தும், அதனை கரைத்தற்கு மருந்து கொடுத்துச் சிலர் உயிர்போக்கியும் இருத்தல் கேட்டும், தம்மிடத்திற் படித்துவிட்டு ஓதாதுணர்ந்தேனென்று பொய் சொன்னதறிந்தும், ஒருவரைச் சூனியஞ்செய்து கொல்வேனென்று ஒரு ஜமீன்தாரிடம் ஆயிரம் ரூபாச் சிவரன் வாங்கிக்கொண்டு ஏமாற்றியதறிந்து துன்புற்றும், செட்டிபாளையத்தில் அவர்க்கு உபசரணை புரிந்த ரெட்டியாரொருவரது தாரத்தைத் தழுவியதுணர்ந்து துக்கித்தும், மனைவியைப் பரதேசி யொருவன் இழுத்துக்கொண்டு திரிதலைக்கண்டு புத்தி சொன்னகாலத்துங் கேளாததுணர்ந்து விசனித்தும் இருந்த, இராமலிங்க பிள்ளையின் உபாத்தியாயரும் தமயனுமாகிய இ. சபாபதிப்பிள்ளை யென்பார் உலக அபவாதத்திற்கு அஞ்சி ஆங்காங்குப் பாடியனுப்பிய அங்கதப்பாடல்களைக் காட்டுகின்றாம். தமயனுங் குருவுமாகிய அவரே இராமலிங்க பிள்ளைக்கும் பாடல்களுக்கும் அப்பெயர்கள் பொருந்தாவென்கின்றார். இதற்குமேற் பிரமாணம் வேண்டுமோ? அவைவருமாறு :—

## இராமலிங்கபிள்ளை அங்கதப்பாட்டு.

அருள்பெற் றேனெனப் பொய்க ளறையுமே
யகன்ற சித்துக்கள் பண்ணுவ னென்னுமே
மருளர் போலருட் பாவெனக் கூவுமே
வாய்ந்தெ னைந்தொழி லென்று மருட்டுமே
குரவ னைந்தெனக் கூறிப் புரட்டுமே
கோது ணீர்விளக் கேற்றின னென்னுமே
பெருமை பேசிப் பசுத்துவங் காட்டுமே
பேரி ராமலிங் கப்பிள்ளை பாடலே. (க)

சேத்த சிவரை வாழச்செய் வேனெனச்
செப்பிப் பொய்ப்பணஞ் சேர்த்துக் கெடுக்குமே
பெத்தத் தன்மைகள் பேசிக் கழியுமே
பேசி ஞானிறை யென்னப் புளுகுமே
கர்த்த ரென்றொ ரிராம னிலக்குமி
கலையி னூளைக் கதறி யழைக்குமே
நித்த னென்று தனைப்பொய் புகலுமே
நீதி நம்பி நிகழ்த்திய பாடலே. (உ)

மறவ ரென்றுதற் கொள்ளா ரிகழுமே
மாதுக் கைம்மைகள் சுற்றப் பிறழுமே
முறைக ளாவகுப் பித்து முடங்குமே
மூலச் சோறு சிவனளித் தானெனக்
கறைகள் பேசிப் படித்தவர் நின்றிடக்
கற்றி லேனருள் கண்டன னென்னுமே
மறைய மற்புதஞ் செய்யென வெள்குமே
மருதூர்த் தம்பி வழுத்திய பாடலே. (௩)

புலவர் யாவர்க்கு நஞ்செனக் காணுமே
பொய்யர் யார்க்குங் கரும்பெனப் போகுமே
யுலகிற் சைவசித் தாந்தக் குறழுமே
யோரில் வள்ளலென் றேப்பில பேசுமே
கலக மாகச் சமரச மென்னுமே
காணு மொன்றினுக் கொன்று முரணுமே
மலமி னல்வரின் பத்தியைப் போக்குமே
மருதூர்த் தம்பி வழுத்திய பாடலே. (௪)

நம்பி னரை நடுத்தெருச் சேர்க்குமே
நானு ளேனெனச் சொல்லி விலகுமே
செம்பு தங்கஞ் செயுமெனச் செப்புமே
தெளியி லங்கது பிம்பெனத் தோன்றுமே
வம்பு பேசி வழக்கிடச் சொல்லுமே
வாய்மை யீதிது வன்கணிற் சொல்கிலே
னெம்பி யென்று முகத்துதி பேசிலேன்
யாவுஞ் சத்திய மெற்குரித் தில்லையே. (௫)